பக்கங்கள்: 12

# காலைக்கதிர்
Kalaikathir

விழியல் 04 வள்ளுவர் ஆண்டு 2051 பங்குனி 12 புதன்கிழமை 25.03.2020 கதிர் 140

**இது ரகசியம் அல்ல!**

கலைக்கப்பட்டநாடாளு மன்றம் மீண்டும் கூட்டப் படுமா?

ஜனாதிபதி கோட்டாபய வில் தொடங்கி, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ முதல், அத் தரப்பில் உள்ள 02

## மூன்று வாரங்கள் முடக்கப்படுகிறது இந்தியா!



கொரோனா அச்சுறுத் தலை எதிர்கொண்டு சமாளிப்பதற்காக இந்தி யாவில் இன்று அதிகாலை 12 மணிமுதல் 21 நாட்கள் வரை முழு ஊரடங்கு உத் தரவு பிறப்பிக்கப்படுகிறது என பிரதமர் மோடி 02

# தேவையான உணவுப்பொருள்கள் மக்களின் வீடுகளைத் தேடி வரும்!

### அரசுத் தரப்பில் நடவடிக்கை என்கின்றார் அமைச்சர் சமல்



கொழும்பு, மார்ச் 25

நாட்டில் மோசமான நெருக்கடி ஏற்பட்டுள்ள வேளையில் மக் களுக்குக் குறைவின்றி, தேவையான உணவுப் பொருள்களை வழங்குவதற்கான வாய்ப்புக்கள் பற்றி அமைச்சர் சமல் ராஜபக்ஷ உரிய அதிகாரிகளுடன் கலந்துரையாடி நடவடிக்கை எடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. 02

## தாவடியில் ஒரு பகுதி தொடர் கண்காணிப்பில்

### தாவடி – சுதுமலை வீதிக்கு தடை



யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ்ப்பாணம் தாவடி - சுதுமலை வீதியானது போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் கோரோனா 02

## மலையகத் தொழிலாளர்களும் ஊரடங்கில் வேலை செய்யலாம்

### மனோ கணேசனின் முயற்சி வெற்றி

கொழும்பு, மார்ச் 25

ஊரடங்கு சமயத்தில் விவ சாயிகள் தொழில் புரிய அனுமதிக் கப்பட்டுள்ளமை போன்று தோட்டத் தொழிலாளர்களுக்கும் அனுமதி வழங்கப்படுகின்றது.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் நேற்று இடம்பெற்ற சர்வ கட்சி கூட்டத்தில்வ்விடயம் தொடர்பாக முன்னாள் அமைச்சர் மனோ கணேசன் முன்வைத்த கோரிக்கைக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இதன்போது, ஊரடங்கு 02

## 102 பேருக்கு கொரோனா!

### சுகாதார அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, மார்ச் 25

கொரோனா தொற்றுக்கு இலக்காகிய மேலும் 5 புதிய நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் எண்ணிக்கை 102 ஆக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இதேவேளை 02

## அத்தியாவசிய உணவுப்பொருள்கள் அடங்கிய பொதி மானிய விலையில்!

### படை மூலம் விநியோகிக்கத் திட்டமாம்



கொழும்பு, மார்ச் 25

மானிய விலையில் அத்தியாவசிய உணவுப்பொருள்கள் அடங்கிய பொதிகளை பொது மக்களுக்கு வழங்க அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது

இதுதொடர்பாக கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தின் பிரதித் தலைவர் சட்டத்தரணி துார திசாநாயக்க தெரிவிக்கையில், இராணுவத்துடன் இணைந்து இந்த மானியப் பொதிகளை விநியோகிக்க எதிர்பார்க்கப் பட்டுள்ளது என்றார்.

## ஊரடங்கிலும் மருந்தகங்கள் இயங்கலாம்!

கொழும்பு, மார்ச் 25

நாட்டில் உள்ள சகல மருந்தகங்களையும் ஊரடங்குச் சட்டம் அமுலாகும் வேளையிலும் தேவையான வகையில் திறந்து வைக்க அனுமதி அளிக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு சுகாதார 02

## ஜனாதிபதி கோட்டாவின் அறிவிப்பு காற்றில் பறந்தது

### கடன் நிலுவை செலுத்தாதமையால் பணம் மீள எடுக்க மறுத்த அரச வங்கி



கொழும்பு,மார்ச் 25

வறுமைக்கோட்டுக்கு உள்பட்ட குடும்பம் ஒன்றுக்கு தனிநபர் கடன் தவணைக் கட்டணம் செலுத்தவில்லை என்ற காரணத்தைக் காண்பித்து வைப்பிலிட்ட பணத்தை மீளப்பெறுவதற்கு வங்கி முகாமை யாளர் மறுத்துள்ளார். 11

## உள்ளூராட்சி மன்றங்கள் மூலம் நிவாரணப் பொதி விநியோகம்

கொழும்பு, மார்ச் 25

தத்தமது அதிகார எல்லைக்குட்பட்ட பகுதி களில் வாழும் மக்களின் உணவுத் தேவைக்கான நிவாரணப் பொதியை 02




**அறிவித்தல்கள் – விளம்பரங்கள்**

உங்களின் நிலை அறிந்து நாங்கள் உதவுகிறோம்!

அத்தியாவசிய, அவசர அறிவித்தல்கள் இலவசம்!
ஏனையவை மிகக் குறைந்த கட்டணத்தில்!!

வீட்டில் இருந்தவாறே உங்கள் தேவைகளையும் தகவல்களையும் மற்றவர்களுக்கு தெரியப்படுத்துங்கள். தினமும் காலையும் மாலையும் ஊரில் மட்டுமல்ல உலகெங்கும் வாழும் பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் கைபேசிகள் மற்றும் கணினிகளில் தவழும் காலைக்கதிர் பத்திரிகையில் உங்கள் விளம்பரங்களை பிரசுரியுங்கள்.

மிகக் குறைந்த கட்டணங்கள்

விளம்பரங்களை இப்பொழுது பிரசுரியுங்கள்!
பின்னர் கட்டணத்தைச் செலுத்தலாம் !!

தொடர்புகளுக்கு: 076 443 8622
kalaikkathiradvt@gmail.com

## சண்டிலிப்பாயில் 214 பேருக்கு தொற்று ஏற்பட்டிருக்க வாய்ப்பு?

(எஸ். நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், மார்ச் 25

போதகருடன் நெருங்கிப் பழகிய மற் றொரு போதகரின் மனைவி மூலம், சண்டிலிப்பாய் பகுதியில் உள்ள 214 பேருக்கு வைரஸ் தொற்று 11

## மூன்று வாரங்கள்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நேற்றிரவு நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் கூறியுள்ளார்.

இந்தியா நேற்று நள்ளிரவு 12 மணிமுதல் 21 நாட்கள் வரை,3 வாரங்கள் தொடர்ந்து முடக்கப்படுகிறது என அவர் கூறியுள்ளார்.

(விரிவான செய்தி 6 ஆம் பக்கத்தில்)

## தேவையான...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உள்நாட்டு வர்த்தகம், உணவுப் பாதுகாப்பு, நுகர்வோர் நலன்புரி அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது, அத்தியாவசியப் பொருள்களை நாடளாவிய ரீதியில் விநியோகிப்பதற்காக ஏனைய நிறுவனங்களின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொள்வது பற்றியும், உணவு வகைகளைப் பொதியிட்டு, அவற்றை மக்களிடம் சென்று விற்பனை செய்வது தொடர்பாகவும் இதன்போது ஆராயப்பட்டது.

இராணுவம், சிவில் பாதுகாப்புப் படையணி என்பனவற்றின் ஒத்துழைப்புக்களைப் பெற்றுக் கொள்ளவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது. சதொஸ விற்பனை நிலையங்கள், கமநல சேவைகள் மத்திய நிலையங்கள், மகாவலி மத்திய நிலையங்கள் என்பனவற்றின் ஊடாக மரக்கறி வகைகள் விற்பனை செய்யப்படவிருக்கின்றன.

அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களை அத்தியாவசிய சேவையாக வர்த்தமானி மூலம் அறிவிக்குமாறு அதிகாரிகள் முன்வைத்த கோரிக்கை தொடர்பான வாய்ப்புக்களையும் கண்டறியுமாறு அமைச்சர் உரிய தரப்புக்களுக்குப் பணிப்புரை வழங்கினார். (ஐ)

## ஊரடங்கிலும்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமைச்சு ஆலோசனை வழங்கியுள்ளது.

வைத்தியசாலைகள், மருந்தகங்களிலிருந்து நாளாந்தம் மருந்துகளைக் கொள்வனவு செய்வோர் ஊரடங்குச் சட்டத்தினால் பாரிய சிரமங்களுக்கு முகங் கொடுத்துள்ளார்கள். இந்த விடயத்தைக் கருத்திற் கொண்டு சுகாதார அமைச்சு இந்த உத்தரவை வழங்கியிருக்கிறது. நோயாளர்களின் நோய் தொடர்பான அட்டை,மருந்துச் சீட்டு என்பனவற்றை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் காலப்பகுதிகளில் அனுமதிப் பத்திரங்களாகப் பயன்படுத்த முடியும்.

மருந்தகங்களில் பணியாற்றுவோருக்கும், மருந்துகளை எடுத்துச் செல்லும் வாகனங்களுக்கும் ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் காலப்பகுதியில் பயணிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்குமாறு சுகாதார அமைச்சு பொலிஸ்மா அதிபரிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

## மலையாகத்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அமுல்படுத்தப்படும் வேளையில் தோட்டத் தொழிலாளர்கள் தொழிலில் ஈடுபடவும், தோட்ட தொழிற்சாலைகள் இரவு நேரத்தில் தொழிற்படவும், தொழிலாளர்களின் வருமானத்துக்கு பாதகம் ஏற்படா வண்ணம் தடையின்றி தொழில் வழங்கப்பட வேண்டும் என மனோ கணேசன் கோரிக்கை விடுத்திருந்தார்.

வயல்களில் விவசாயம் செய்வோருக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதி தோட்ட தொழிலாளருக்கும் வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்திருந்தார்.

இதை மனோ கணேசன் தனது முகப் புத்தக வலைத்தளத்தில் குறிப்பிடப்பட்டுள்ளார். இது தொடர்பில் மலையக பிரதேச பொலிஸ் பொறுப்பதிகாரிகளுக்கு உரிய அறிவுறுத்தல்களை பொலிஸ்மா அதிபர் உடன் வழங்குவார் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## தாவடியில்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தொற்றால் பாதிக்கப்பட்டவரின் வீடு அமைந்துள்ள தாவடிக் கிராமம் முழுமையான கண்காணிப்பில் உள்ள நிலையில் நேற்றுக் காலை 8.30 மணியில் அப்பகுதியில் இருந்து வெளியேறவோ அல்லது உள் நுழையவோ அனுமதி மறுக்கப்பட்டது.

கிராம சேவகர், பிரதேச செயலாளர், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர், பொதுச் சுகாதார அதிகாரி, பொலிஸார், இராணுவத்தினர் அங்கு கண்காணிப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ-07)

## சண்டிலிப்பாயில்...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஏற்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் எழுந்துள்ளது என யாழ்.மாவட்ட அரச அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று நடந்த செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

தாவடிப் பகுதியில் கொரோனா வைரஸ் தாக்கத்துக்கு உள்ளான நபரின் மனைவி சமுர்த்தி உத்தியோகத்தராவார். அவர் அண்மையில் 214 சமுர்த்தி பயனாளிகளுக்குக் கொடுப்பனவு வழங்கியுள்ளார். எனவே அவரிடம் இருந்து சமுர்த்தி கொடுப்பனவைப் பெற்றுக் கொண்ட பயனாளிகள் அனைவரும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அடையாளம் காணப்பட்ட நபர்களைத் தீவிரமாக கண்காணிக்கும் நடவடிக்கை உடனடியாகவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும் அவர்களை தனிமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

அதேவேளை, கைதடி சந்தியில் உள்ள இலங்கை வங்கியில் பணியாற்றும் பெண் ஒருவர் கொரோனா தொற்றுக்குள்ளான நபரின் வீட்டுக்கு அருகில் இருப்பதுடன், அவரது உறவினர் என அடையாளம் காணப்பட்டிருக்கும் நிலையில் இலங்கை வங்கி கிளை 14 நாள்கள் பூட்டப்பட்டுள்ளது. மேலும் குறித்த பணியாளர் 14 நாள்கள் தனிமைப்படுத்தப்பட்டிருப்பதுடன், குறித்த வங்கி கிளை அலுவலகத்தில் கிருமி நீக்கிகள் நேற்று விசிறப்பட்டிருக்கின்றன - என்றார். (ஐ-07)

## உள்ளூராட்சி...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வழங்குமாறு உள்ளூராட்சி மன்றத் தலைவர்களுக்கு உள்ளூராட்சி மன்றங்கள், மாகாண சபை அமைச்சர் ஜனக பண்டார ஆலோசனை வழங்கியுள்ளார்.

இதற்கு தேவையான வழிகாட்டல்கள் அனைத்து உள்ளூராட்சிமன்றத் தலைவர்களுக்கும் அனுப்பப்பட்டுள்ளன என அறிக்கை ஒன்றினூடாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் தற்போது நிலவும் நிலைமையைக் கருத்திற் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறியுள்ளார். (ஐ)

## ஜனாதிபதி...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இந்தச் சம்பவம் வட்டுக்கோட்டைப் பகுதியில் உள்ள அரச வங்கிக் கிளையில் நேற்று செவ்வாய்க்கிழமை இடம்பெற்றதாகப் பாதிக்கப்பட்ட தாயார் தெரிவித்தார்.

10 லட்சம் ரூபாவுக்கு உள்பட்ட வங்கிக் கடன் நிலுவைகள் அறவீட்டை 3 மாதங்களுக்கு இடைநிறுத்தி வைக்குமாறு வங்கிகளின் தலைவருக்குப் பணித்துள்ளதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ள நிலையில் இந்தச் செயலை வட்டுக்கோட்டை அரச வங்கிக் கிளை முகாமையாளர் செய்துள்ளார்.

வட்டுக்கோட்டை (ஜே/160) அராலி மேற்கைச் சேர்ந்த மயூரன் நிசாந்தினி என்பவரே வங்கி முகாமையாளரின் செயற்பாட்டால் தான் பாதிக்கப்பட்டார் எனத் தெரிவித்தார்.

இன்றைய தினம் வங்கிக் கிளையில் உறவினர் ஒருவர் அனுப்பிய 2 ஆயிரம் ரூபாய் பணத்தை மீளப்பெறுவதற்குச் சென்றிருந்தேன்.

கடந்த ஆண்டு அந்தக் கிளையில் ஒரு லட்சம் ரூபா சுயதொழில் கடனைப் பெற்றிருந்தேன். கடன் தொகையினை காலம் தவறாது கடந்த மாதம் வரையிலும் சரியாக மீள செலுத்தி வந்துள்ளேன்.

இந்த மாதம் வீட்டு வறுமை காரணமாக உறவினர் வழங்கிய 2 ஆயிரம் ரூபாய் பணத்தை பெறுவதற்கு வங்கிக்குச் சென்றபோது அதனை வழங்க மறுத்தனர் என்று பாதிக்கப்பட்ட தாயார் தெரிவித்தார்.

இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரி கரிசனை கொள்ளவேண்டும் என்று கோரப்பட்டுள்ளது. (ஐ)

## இனி...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உதய கம்மன்பில வரை இல்லை என்றுதான் சொல்லுவார்கள்.

கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தைத் தம்பித் தவறிக் கூட்டும் நிலைமை வந்துவிடுமோ என்ற அச்சத்தில், அதற்கு முன்னர் நாடாளுமன்றக் கட்டத் தொகுதியையே இப்போது கொரோனாத் தொற்றுத் தொடர்பான சந்தேகத்தில் தனிமைப்படுத்துவோரை தங்க வைக்கும் முகமாக - மையமாக - நிலைமையாக - மாற்றி விட வேண்டும் என்று துடிக்கின்றார் தற்போது கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தில் அதிகாரத்தில் இருந்த மஹிந்த ராஜபக்ஷ அரசின் இராஜாங்க அமைச்சர் ஒருவர்.

ஆனால் நிலைமை போகின்ற போக்கில் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தைக் கூட்டுவதைத் தவிர ஜனாதிபதிக்கும் அரசுக்கும் வேறு வழியே இருக்கப் போவதில்லை என்று முக்கிய அரசியல் தலைவர் ஒருவர் நேற்று அடித்துக் கூறினார்.

அவரது கூற்றை உறுதிப்படுத்துமாற்போல நேற்று ஒரு சம்பவம் நடைபெற்றது.

நேற்றுக் காலை அலரி மாளிகையில் கட்சித் தலைவர்களின் கூட்டம் நடைபெற்றது அல்லவா?

அனைத்துக் கட்சிகளினதும் மூத்த தலைவர்களும் வந்திருந்தனர். அந்தக் கூட்டத்தில் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தை மீண்டும் கூட்ட வேண்டி நேரும் என சுமந்திரனும், ஹக்கீமும், சஜித் பிரேமதாஸவும் கூறிய போது உதய கம்மன்பிலவைத் தவிர அரசுத் தரப்பில் வேறு யாரும் அதை எதிர்த்து அதிகம் பேசவில்லை. அந்தக் கருத்தை ஒரு காதால் வேண்டி மறு காதால் விட்ட வர்களாகவே அவர்கள் இருந்தனர்.

ஏனென்றால் பொதுத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில் ஓர் அரசமைப்பு நெருக்கடி ஏற்படாமல் தவிர்ப்பதற்காக ஏதோ ஒரு கட்டத்தில், ஏற்கனவே கலைக்கப்பட்ட நாடாளுமன்றத்தைக் கூட்டுவது கட்டாயமாகும் என்பது அவர்களுக்கு நன்கு தெரியும்.

அதை உறுதிப்படுத்துமாற் போல சம்பவம். நேற்றைய கூட்டம் முடிவடைந்த பின்னர் முன்னாள் பிரதமர் ரணிலையும், எம்.ஏ.சுமந்திரனையும் கூட்ட மண்டபத்துக்குள்ளேயே தனியாக அழைத்துப் பேசினார் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன.

உலக நாடுகள் பலவும் கொரோனா வைரஸ் நெருக்கடியைச் சமாளிப்பதற்காக - அந்தப் பிரச்சினையை எதிர்கொள்வதற்காக - பல புதிய சட்டங்களை அவசர அவசரமாகக் கொண்டு வந்து நடைமுறைப்படுத்தியுள்ளன என்று சுட்டிக் காட்டிய தினேஷ் குணவர்த்தன, பிரிட்டன் கொண்டு வந்துள்ள சட்ட விதிகளை மேற்கோள் காட்டினார். அவற்றை ஒத்த ஏற்பாடுகளை இங்கே அவசர அவசரமாகக் கொண்டு வர வேண்டியிருக்கும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

அந்தச் சட்டங்களைத் தேடிப் பிடித்து, பரிசீலித்து, சாதக பாதகங்களைக் கணக்கில் எடுத்து, இலங்கைக்கு ஏற்ற மாதிரி அவற்றை மாற்றித் தரும் பொறுப்பை சுமந்திரனை முன்னெடுக்கும்படியும், முன்னாள் பிதமர் ரணிலின் அனுபவத்தையும் அதற்குள் உட்செலுத்துகை செய்யுமாறும் தினேஷ் குணவர்த்தன கூறினார். அதற்கு சுமந்திரன் சம்மதித்தார் என்றும் அறிய வருகின்றது.

இதில் இருந்து எனது மனதுக்குப் பட்ட இரண்டு கேள்விகள்.

ஒன்று - அவசர அவசரமாக இந்தச் சட்டங்களையும் கொண்டு வந்து நிறைவேற்றுவதாயின் அதற்கு நாடாளுமன்றம் தேவையே...? இல்லாத நாடாளுமன்றத்தில் எழுதாத சட்டத்தை நிறைவேற்ற முடியாதே...? ('இல்லாத மேடையில் எழுதாத நாடகத்தை எல்லோரும் நடிக்கின்றோம்' என்ற சினிமாப் பாடல் வரியில் கேட்டேன். அவ்வளவுதான்.)

அடுத்தது - மூத்த சட்டவாளர், ஜனாதிபதி சட்டத்தரணி என்ற முறையில் இந்தப் பொறுப்பை உரிமையுடன் கேட்டு ராஜபக்ஷ அரசின் சார்பில் அமைச்சர் தினேஷ் குணவர்த்தனா நேரடியாக சுமந்திரனிடம் ஒப்படைத்திருக்கக் கூடும். அவரும் சம்மதித்து விட்டார்.

இனி என்ன...? இதுவரை காலமும் 'பிரதமர் ரணிலின் ஆள்' என்ற சுமந்திரனுக்கு எதிரான வசை பாடல். இனி 'மஹிந்தவின் ஆள்' என்றோ, 'கோட்டாவின் ஆள்' என்றோ மாறி விடுமோ? ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் நெருக்கடியிலிருந்து இலங்கை அரசைக் காப்பாற்றியவர் என்று சுமந்திரனுக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு, இனி கொரோனா விலிருந்து இலங்கை அரசைக் காப்பாற்றினார் என்று மாறி விடுமோ என்னவோ..? எல்லாம் ஆண்டவனுக்குத் தான் வெளிச்சம்..!

- மின்னல் -

## 102 பேருக்கு...
(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இரண்டு நோயாளர்கள் குணமடைந்து வைத்தியசாலைகளிலிருந்து வெளியேறியுள்ளனர் என்றும் தொற்றுக்குள்ளானதாகச் சந்தேகிக்கப்படும் 229 பேர் தொடர்ந்தும் மருத்துவக் கண்காணிப்பின் கீழ் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்றும் சுகாதார மேம்பட்டுப் பணியகம் தெரிவித்துள்ளது.

இதனிடையே, கொழும்பு ஐ.டி.எச்.வைத்தியசாலையின் வைத்தியர் ஒருவருக்கும் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் வைத்தியசாலையில் பணியாற்றிய சமூக வைத்திய நிபுணர் ஒருவரே தொற்றுக்குள்ளாகியுள்ளார். (ஐ)

# அத்தியாவசிய உணவுப் பொருள்களை ஏற்றி வரவும் உள்ளூர் உற்பத்திகளை எடுத்துச் செல்லவும் அனுமதி

யாழ்ப்பாணம்,மார்ச்25

கொழும்பு உள்பட வெளிமாவட்டங்களிலிருந்து அத்தியாவசிய உணவுப் பொருள்களை ஏற்றி வரவும் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்கு உள்ளூர் உற்பத்திப் பொருள்களை எடுத்துச் செல்லவும் வாகனங்களுக்கு வழி அனுமதி வழங்கப்படுவதாக மாவட்டச் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன் அறிவித்துள்ளார்.

எனவே சம்பந்தப்பட்ட வாகனங்களின் உரிமையாளர்கள் சாரதி மற்றும் உதவியாளரின் பெயர்களைப் பதிவு செய்யுமாறும் அவர் கேட்டுள்ளார்.

இதுதொடர்பில் மாவட்டச் செயலாளர் அனுப்பிவைத்த

## சாரதி, வாகனப் பதிவுகளைச் செய்யுமாறு அறிவிப்பு

செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:–

யாழ்ப்பாணம் மாவட்டத்துக்குத் தேவையான அத்தியாவசிய உணவுப் பொருள்களை கொழும்பு உள்பட வெளிமாவட்டங்களிலிருந்து கொள்வனவு செய்து எடுத்து வரவும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை வெளிமாவட்டங்களுக்கு எடுத்துச் செல்வதற்குமான வாகன வழி அனுமதி வழங்கப்படுகிறது.

வாகனத்தின் சாரதி, உதவியாளரது பெயர், தேசிய அடையாள அட்டை, வாகன இலக்கம், யாழ்ப்பாணம் மாவட்டத்துக்கு எடுத்து வருகின்ற பொருள்கள் ஆகிய விவரத்துடன் உரிய பிரதேச செயலரது பரிந்துரையைப் பெற்று அலுவலக நாள்களில் காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணிவரை மாவட்டச் செயலகத்தின் பரிந்துரையைப் பெற்று யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் யாழ்ப்பாணம் இராணுவ சிவில் பாதுகாப்பு அதிகாரியின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள முடியும் – என்றுள்ளது.

## வரலாறு காணாத வீழ்ச்சியை சந்தித்துள்ள இலங்கை ரூபா!

*கொழும்பு, மார்ச் 25*

*வரலாற்றில் முதல் முறையாக அமெரிக்க டொலர் ஒன்றுக்கு எதிராக இலங்கை ரூபாவின் பெறுமதி மிக மோசமான வீழ்ச்சியை சந்தித்துள்ளது.*

*இலங்கை மத்திய வங்கி நேற்று வெளியிட்ட நாணய மாற்று விகிதங்களின் அடிப்படையில், அமெரிக்க டொலர் ஒன்றுக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 190 ரூபாவைக் கடந்துள்ளது.*

*இன்றையதினம் டொலர் ஒன்றின் விற்பனை விலை 190.61 ரூபாவாகப் பதிவாகியுள்ளது. (ஐ)*

## ஊரடங்கு வேளையில் நடமாட மக்களுக்கு அனுமதிப்பத்திரம்

### அரசுக்கு ஜே.வி.பி. ஆலோசனை



கொழும்பு, மார்ச் 25

ஊரடங்குச்சட்டம் அமுலில் உள்ளபோதே நாள் ஒன்றுக்கு ஒரு தடவை மாத்திரம் பயன்படுத்த மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்யக்கூடிய அனுமதிப்பத்திரம் ஒன்றை மக்களுக்கு வழங்கவேண்டும் என மக்கள் விடுதலை முன்னணி ஆலோசனை வழங்கியுள்ளது.

அவ்வாறு செயற்படுவதன் மூலம் ஊரடங்கைத் தளர்த்தியதும் மக்கள் மத்தியில் ஏற்படும் அவதியைத் தவிர்க்க முடிவதுடன் கொரோனா வைரஸ் பரவுவதையும் கட்டுப்படுத்த முடியும் என அந்தக் கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்தநாயக்க தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்துவதன் மூலம் கொரோனா வைரஸ் தொற்று பரவுவதைக் கட்டுப்படுத்த முடியும் என்றாலும்கூட, ஊரடங்குச் சட்டத்தைத் தளர்த்தும் அந்த சில மணிநேரங்களில் ஏற்படும் அவதி மற்றும் நெருக்கடியைக் கட்டுப்படுத்துவது இலகுவான விடயமல்ல.

அது ஒழுக்கம் தொடர்பான பிரச்சினை அல்ல. மாறாக பெருமளவான மக்கள் குறுகிய நேரத்திற்குள் பொருள்களைக் கொள்வனவு செய்ய வேண்டிய அவசியம் காணப்படும்.

அதேவேளை, அதற்கேற்றவாறு விற்பனை நிலையங்கள் வடிவமைக்கப்படவில்லை என்பதால் இத்தகைய நெருக்கடி நிலையொன்று ஏற்படுவது தவிர்க்கப்பட முடியாததாகும். அதன் காரணமாக ஊரடங்குச் சட்டத்தை அமுல்படுத்திய மைக்கான நோக்கத்தை முழுமையாக அடைந்துகொள்ள முடியாத நிலையொன்று ஏற்படும்.

எனவே, ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும் அதேவேளை மருந்தகம் மற்றும் அத்தியாவசியப் பொருள்களை விற்பனை செய்யும் நிலையங்கள் திறக்கப்பட வேண்டும்.

அதேபோன்று கிராமசேவை அலுவலர்களின் ஊடாக நாளொன்றுக்கு ஒரு தடவை மாத்திரம் பயன்படுத்தி மருந்து மற்றும் அத்தியாவசியப் பொருட்களைக் கொள்வனவு செய்யக்கூடிய அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பெற்றுக்கொடுக்க வேண்டும்.

அதன்மூலம் மக்கள் மத்தியில் ஏற்படும் அவதியைத் தவிர்க்க முடிவதுடன், கொரோனா வைரஸ் பரவுவதையும் கட்டுப்படுத்த முடியும். உலகின் பல நாடுகளிலும் இந்த நடைமுறை பின்பற்றப்பட்டு வருகின்றது.

மேலும் வீடுகளுக்குச் சென்று உணவுப்பொருட்களை விற்பனை செய்யும் நடைமுறை இலங்கையில் காணப்படுவதால், அவ்வாகன உரிமையாளர்களை சதொச போன்ற விற்பனை நிலையங்களுடன் தொடர்புபடுத்தி, வீடுகளுக்குச் சென்று பொருகளை விற்பனை செய்யும் திட்டத்தை அமுல்படுத்த முடியும். இம்முறை சீனாவில் வெற்றிகரமாக அமுல்படுத்தப்பட்டது – என்றார். (ஐ)

## ரணில் முன்வைத்த கோரிக்கை

*கொழும்பு, மார்ச் 25*

*கொரோனா தொற்றை தடுப்பதற்கு தற்போது அரசாங்கம் முன்னெடுத்துள்ள செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லவேண்டும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.*

*பிரதமர் தலைமையில் நேற்று அலரிமாளிகையில் இடம்பெற்ற கலந்துரையாடலியில் கருத்து தெரிவித்த அவர், மக்கள் ஒன்றுக்*



*கூடுவதை தவிர்ப்பதற்கு ஊரடங்குச்சட்டத்தைத் தொடர்ந்து நடைமுறைப்படுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தார்.*

*அத்தோடு அத்தியாவசிய தேவைகளற்ற அரச சேவைகளுக்கும் விடுமுறை வழங்க வேண்டும் என்றும் ரணில் விக்ரமசிங்க பிரதமரிடம் யோசனையை முன்வைத்திருந்தார்.*

*இதேவேளை, கொரோனா தொற்றை தடுப்பதற்கு முன்னெடுக்கும் செயற்பாடுகளைப் போன்று பொருளாதாரத்திற்கு ஏற்படும் பாதிப்புகள் குறித்தும் மக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை பெற்றுக் கொடுப்பதற்கும் உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு சபாநாயர் கரு ஜயசூரிய கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது.*

## பத்தனை பகுதியில் பாரிய தீ!

கொழும்பு, மார்ச் 24

திம்புள்ள – பத்தனை டெவோன் வனப் பகுதியில் நேற்று செவ்வாய்க்கிழமை மாலை ஏற்பட்ட பாரிய தீ பரவல் காரணமாக 5 ஏக்கர் காட்டுப்பகுதி தீக்கிரையாகியுள்ளது.

இந்த வனப் பகுதியில் தீ வேகமாகப் பரவி வருவதால் மேலும் பல ஏக்கர் காடுகள் எரிந்து நாசமாகலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

உஷ்ணமான கால நிலையால் இந்தத் தீ ஏற்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படும் நிலையில், மனித செயற்பாடு உள்ளதா என்ற கோணத்தில் பொலிஸ் விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன.

பொலிஸாரும், பத்தனை பிரதேச மக்களும் இணைந்து தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.









# நமது பார்வை

உண்மை – நேர்மை – பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி – 021 222 3000,
மின்னஞ்சல் – kalaikkathirnews@gmail.com
இணையம் – https://kalaikathir.online



# கொரோனா அச்சுறுத்தல்: இத்தலைமை தோற்றால் எத்தலைமை வெல்லும்?

கொரோனா பேரரக்கனைக் கட்டுப்படுத்துவதற்கு மூர்க்கத்தனமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என உலக சுகாதார ஸ்தாபானமே பரிந்துரை செய்துகின்றது.

மூர்க்கத்தனம் என்பது தீவிரமான – கடுமையான – வலிமையான – என்றே இங்கு அர்த்தப்படுத்தப்பட வேண்டும். முட்டாள்தனமானதாக அது இருக்கக் கூடாது.

கண்ணுக்குத் தெரியாத இந்த எதிரியை மதிநுட்பத்துடனும், சாதுரியத்துடனும், தந்திரரோபயத்துடனும்தான் அணுக வேண்டும். விடயங்களை விஞ்ஞானபூர்வமாக ஆராய்ந்து முடிவுகளை எடுக்க வேண்டும். சாதக, பாதகங்களை பகுத்தறிந்து நிலைமைகளைச் சரிவரக் கையாண்டு, தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும்.

பொதுமக்கள் பெரும் எண்ணிக்கையில் வகைதொகையின்றி ஒன்று கூடுவதால் கொரோனா வைரஸ் பரம்பலுக்கான சாத்தியம் அதிகரிக்கும் என்பது கண்கூடு.

அதைத் தவிர்ப்பதற்காகத்தான் ஊரடங்கு என்பது எல்லோராலும் புரிந்து கொள்ளத்தக்கதுதான்.

ஆனால் அந்த ஊரடங்கு மூலமான பயனை முட்டாள்தனமான ஒரு தீர்மானம் வாயிலாகப் போட்டுடைத்து விடக் கூடாது.

ஆனால், காலவரையறையற்ற ஊரடங்கைப் பிறப்பதில் இறுக்கமும், உறுதியும் காட்டிய ஆட்சிப் பீடம், அதைத் தளர்ந்துவதில் மிக மெத்தனமாக நடந்து, மோசமான – முட்டாள்தனமான – தவறிழைத்து விட்டதோ என்று கருத வேண்டிய நிலையே இன்று ஏற்பட்டுள்ளது.

ஊரடங்கு பிறப்பிக்காமல் சுமுக நிலை நிலவிய காலத்தை விட, மிக மோசமான நிலையை இப்போது ஊரடங்கு பிறப்பித்து விட்டு அதைத் தளர்த்திய நிலைமை ஏற்படுத்தி விட்டது.

மூன்று நாள்கள் மக்களை வீடுகளுக்குள் முடக்கி வைத்து விட்டு, நான்காம் நாள் கட்டுப்பாடில்லாமல் ஊரடங்கை நீக்கியதன் மோசமான விளைவைப் பார்த்து கற்றறிந்தோர் விக்கித்து, திகைத்து நிற்கின்றனர்.

கொழும்பு புறக்கோட்டையும், யாழ்ப்பாணம் நகரமும், மருதனார்மடம் சந்தையும் இதற்கு நல்ல உதாரணம்.

வழமையான நாள்களை விட மிக மோசமாக மக்கள் கூடும் ஒரு சூழ்நிலையை இந்த ஊரடங்குத் தளர்வு முறைமை ஏற்படுத்தி விட்டது.

கொரோனா வைரஸின் தீவிரப் பாய்ச்சலுக்கு வழி சமைத்து விட்ட முட்டாள்தனமான முடிவாகவே இதைப் பார்க்க வேண்டும்.

மேற்கு நாடுகளே கொரோனா என்ற கண்ணுக்குத் தெரியாத வைரஸைக் கட்டுக்குள் கொண்டு வருவதற்காக வாரக் கணக்கில் ஊரடங்கை நீடிக்கும் போது, இலங்கையில் அதைச் செய்ய முடியாத இந்த அரசும் அதிகாரமும் ஏளனத்துக்குரியனவாகி விட்டன.

கோட்டாபய போன்ற இராணுவ மிடுக்கு சர்வாதிகாரியிடமிருந்து கொரோனா என்ற பேரரக்கனை அடக்குவதற்கு தீவிரமான – காத்திரமான – உறுதியான – பிசிறில்லாத – நடவடிக்கையை இலங்கை நாடு எதிர்பார்த்து இருந்தது, இருக்கின்றது என்பது உண்மை.

ஊரடங்கில் முடங்கிக் கிடக்கும் மக்களின் அன்றாடப் பிரச்சினைகள், அவலங்கள் தீர்க்கப்பட வேண்டும் என்பது உண்மைதான். கொரோனாவை அடக்குகிறேன் என்ற பெயரில் அவர்களை வீடுகளுக்குள் முடக்கி, பட்டினி போட்டு, சாகடிக்க முடியாதுதான். அவர்களின் பிரச்சினைகளை – குறிப்பாக அன்றாடம் காய்ச்சிகள், ஏதிலிகள், ஆதரவற்ற வயோதிபர்கள் போன்றோரின் உடனடிப் பிரச்சினைகளை – புறந்தள்ளி ஆட்சிப் பீடம் முரட்டுத் தனமாக நடந்து கொள்ள முடியாது என்பதும் நீதியானதுதான்.

ஆனால் இவற்றை எல்லாம் தீர்ப்பதற்கு வெறுமனே ஊரடங்கைத் தளர்த்தி விடுவதுதான் வழி என்று கருதினால் அது, விவேகமற்ற நடவடிக்கையன்றி வேறில்லை.

இப்படி முடக்கி வைத்த மக்களை ஒன்றாகத் திறந்து விடுவது மிக மோசமான மக்கள் ஒன்றுகூடலுக்கும், கொரோனாவின் பரம்பல் வீச்சு எகிறலுக்கும்தான் வழி வகுக்கும் என்பதை முதலில் மறந்து விட்டோம்.

ஊரடங்கில் முடங்கிக் கிடந்த மக்களின் உடனடிப் பிரச்சினைகளை – நெருக்குவாரங்களை – தீர்ப்பதற்கு ஊரடங்கை நீக்குவதை விட, அவர்களை அதிகார பீடமே தேடிச் சென்று அவற்றைத் தீர்க்க முயன்றிருக்கலாம்; முயன்றிருக்க வேண்டும்.

எண்ணிக்கையில் லட்சங்களில் முப்படையினரையும் பொலிஸாரையும், அதையும் தாண்டி பல லட்சங்களைக் கொண்ட அரச ஊழியர்களின் பணியாள் தொகுதியையும் கொண்டிருக்கும் அரசுக்கு இது ஒரு மலைக்க வைக்கும் விடயமல்ல.

அதுவும், படைத்தரப்பு மற்றும் பொலிஸார் மீது இந்த ஆட்சித் தலைமைக்கு இருக்கும் பிடிமானத்தின் அடிப்படையில் இதனைக் கவனித்தால் அது நன்கு புரியும்.

கொரோனா ஆபத்து நீங்கும் வரைத் முழுத் நாட்டையுமே ஊரடங்கில் முற்றாக முடக்கி வைத்துக் கொண்டு –

அதை முழு அளவில் நடைமுறைப் படுத்திய வண்ணம் –

முழுநாட்டிலும் ஒவ்வொரு பிரஜையினதும் அடிப்படை, அத்தியாவசியத் தேவைகளைத் தேடிச் சென்று நிறைவு செய்வதற்கான திட்டம் ஒன்றையே இந்த அரசு முன்னெடுக்க வேண்டும்.

அதற்கான ஆளணி, அம்பு, நெருக்கடிகால நிதி ஆதாரங்கள், பக்கபலம், ஒத்துழைப்பு ஆகியவற்றுடன் இவை எல்லாவற்றுக்கும் மேல் தற்றுணிவோடும், திடசங்கற்பத்தோடும் தீர்மானங்களைத் துணிச்சலாக எடுத்து, செயற்படுத்தும் தலைமைத்துவமும் இந்த அரசுக்கு உண்டு. அதற்கான மக்கள் ஆதரவும் இந்த அரசுக்குத் தாராளமாக உள்ளது.

அப்படி இருந்தும் இவ்வாறு மோட்டுத்தனமான ஊரடங்குத் தளர்வு முடிவை – தீர்மானத்தை – இந்த ஆட்சிப் பீடமும் – விளைவுகளை மனங்கொள்ளாமல் எடுத்தது – எடுத்துக்கொண்டிருக்கின்றது என்பது இலங்கை தேசத்தை பொறுத்தவரை பெரும் துரதிஷ்டமே.

## கொரோனா வைரஸ் தொடர்பில் சீனாவின் பிந்திய அனுபவங்கள்!

*கொரோனா தொடர்பாக சீனாவிடம் இருந்து பிந்திய மருத்துவ அறிவுரைகள், சீன மருத்துவர்கள் இறந்த நோயாளிகளை பிரேத பரிசோதனை செய்ததில் இருந்து கிடைத்தவை:-*

*1) இந்த வைரஸ் சுவாசக் கால்வாயில் தடித்த சளியை உருவாக்கி, அந்த சளி உறை வதன் மூலமாக சுவாசப் பாதையை அடைக்கிறது.*

*2) மருந்தின் மூலம் சிகிச்சை செய்வதத்திற்கு அடைப்புகள் நீக்கப்பட்டு, சுவாசப் பாதை திறக்கப்பட வேண்டும். இப்படி அடைப்பை நீக்கி, சுவாசப் பாதையை திறப்பதற்கு எண்ணுக்கணக்கிலான நாள்கள் தேவை.*

*கொரானாவில் இருந்து உங்களை பாதுகாப்பதற்கான சீன மருத்துவர்களின் பரிந்துரைகள் பின்வருமாறு: -*

*1) சூடான நீராகாரங்களை அடிக்கடி எடுங்கள் - தேநீர், காபி, சூப், வெந்நீர் போன்றவை. அத்துடன், 20 நிமிடத்திற்கு ஓர் தடவை ஓர் முரடு வெந்நீரை உள்கொள்வது, வாயை ஈரலிப்பாக வைத்திருப்பதுடன், வைரஸை (வாய்க்குள் இருந்தால்) உணவுக்கு கால்வாய் வழியாக கழுவி வயிற்றை அடைந்து சமிபாடு தொகுதியினால் நடுநிலையாக்கப்படச் செய்தல்* (neutralise).

*2) இயலுமானவரை, ஒவ்வொருநாளும் வெந்நீராலும், உப்பு அல்லது எலுமிச்சம் சாறு அல்லது வினிகர் தொண்டையையும், வாயையும் அலசுங்கள்* (gargle)

*3)* covid19 *வைரஸ் உடையிலும், மயிரிலும் ஒட்டிக் கொள்ளும் தனமாய் உள்ளது. எந்த சவர்க்காரமமும் அல்லது* -etergent cD covi-19 *ஐ கொல்லக் கூடியது. எனவே, வெளியில் சென்று வீடு திரும்பியவுடன், ஓர் இடத்தில் தொடாமலும், இருக்காமலும், நேரடியாக குளியல் செய்யுங்கள் அல்லது தோயுங்கள்.*

*4) நாள்தோறும் உடைகளை தோய்க்க முடியாவிட்டால், சூரிய வெய்யிலில் உலர்த்துவது வைரஸ் ஐ கொல்லக் கூடியது.*

*5) உலோக மேற்பரப்புகள் மற்றும் தொடு பரப்புகளை* (metalic surface) *மிகவும் கவனாமாக கழுவுங்கள். ஏனெனில், உலோக தொடுப்பரப்புக்களில் 9 நாள்கள் வரைக்கும் இந்த வைரஸ் தாக்கு பிடிக்க கூடியது.*

*6) கைபிடி சட்டங்கள், கதவின் கைப்பிடிகள் போன்றவற்றில் கவனமெடுத்து, தொடுவதை தவிருங்கள் அல்லது தவிர்ப்பதற்கன முறைகளை (கையுறை) கடைபிடியுங்கள். உங்கள் வீடுகளில் கைபிடி சட்டங்கள், கதவின் கைப்பிடிகள் போன்றவற்றை சுத்தமாக வைத்திருங்கள்.*

*7) புகை பிடிப்பதை தவிருங்கள்.*

*8) உங்கள் கைகளை 20 நிமிடத்திற்கு ஓர் தடவை நுரைக்கும் சவர்க்கரத்தினால் 20 நொடி கழுவுங்கள்.*

*9) மரக்கறி மற்றும் பழவகைளை உட்கொள்ளுங்கள். விற்றமின் ஸீ மாத்திரமின்றி, உங்கள் நாக தாது* (Zinc) *ஊட்டச்சத்தை தரக்கூடிய அல்லது கூட்டக் கூடியதாக இருக்கும் வழிமுறைகளை கையாளுங்கள்.*

*10) மிருகங்கள்* covid19 *ஐ மனிதருக்குக் கடத்துவதில்லை. மனிதனில் இருந்து மனிதனுக்கே கடத்தப்படுகிறது.*

*11) இயலுமானவரை தடிமன், காய்ச்சலைத் தவிர்ப்பதற்கு முயற்சியுங்கள். குளிரான உணவுகளை தவிருங்கள்.*

*12) எதாவது தொண்டை கரகரப்பு அல்லது தொண்டை அரிப்பு வருவதற்கன அறிகுறிகளோ அல்லது உணர்வோ தென்பட்டால், மேற்கூறியவற்றின் மூலம் தொண்டை கரகரப்பு அல்லது தொண்டை அரிப்பு போன்றவற்றிற்கு எதிர்ப்பை ஏற்படுத்தி கொள்ளுங்கள்.*

*13)* covid-19 *தொண்டை கரகரப்பு அல்லது தொண்டை அரிப்பு மூலம் தொற்றி, 3 - 4 நாள்கள் வரை தொண்டையில் தங்கி இருந்து, சுவாசப் பாதை வழியாக நுரையீரலை சென்றடையும். எனவே தொண்டை கரகரப்பு அல்லது தொண்டை அரிப்பு போன்றவற்றிற்கு மேற்கூறிய படிமுறைகள் மூலம் எதிர்ப்பை ஏற்படுத்தி கொள்ளுங்கள்.*

*14) உங்களில் கவனமெடுப்பதுடன், ஏனையோருக்கும் இந்த தகவல்களை பகிர்ந்து கொள்ளுங்கள்.*

## நாளை 26.03.2020 வியாழக்கிழமை

நட்சத்திரம்: ரேவதி காலை 7.02
திதி : துதியை மு.ப 7.25 வரை
இராகுகாலம் : 1.44– 3.14
சுப நேரம் : 7.44 – 9.14

# படு தீவிரமாகப் பரவுகின்றது கொரோனா

# 4 லட்சம் பாதிப்பு: 17 ஆயிரம் மரணங்கள்

லண்டன், மார்ச் 25

கொவிட் 19 எனப்படும் கொரோனா வைரசினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 4 லட்சத்தை எட்டியுள்ளது. நேற்றிரவு வரையில் 3 லட்சத்து 95 ஆயிரத்து 750 பேருக்குத் தொற்று உறுதிப்பட்டிருந்தது. இவர்களில் ஒரு லட்சத்து 4 ஆயிரம் பேர் தொற்றிலிருந்து மீண்டு குணமாகியுள்ளனர்.

உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 17 ஆயிரத்து 234ஆக நேற்றிரவு பதிவாகியது. தொடர்ந்தும் உயிரிழப்பு அதிகரித்துக்கொண்டே இருக்கின்றது. அனைத்து நாடுகளும் கொரோனா உயிரிழப்பு எப்போது ஏற்படுமோ என்கிற அச்சத்தில் சிக்கிக்கொண்டு தவிக்கின்றன.

உலகிலேயே மிக அதிகமாக இத்தாலியில் 6 ஆயிரத்து 77 பேர் உயிரிழந்துள்ளனர். நோய்த் தொற்றுக் கண்டறியப்பட்ட சீனாவில் ஏற்பட்டதைப் போன்று சுமார் இரு மடங்கு உயிரிழப்பு இத்தாலியில் நிகழ்ந்துள்ளது.

அங்கு நோய்த் தொற்றுக்குள்ளானவர்களின் எண்ணிக்கையும் 64 ஆயிரமாக உயர்ந்துள்ளது. அவர்களில் இதுவரை 7 ஆயிரத்து 500 பேர் மட்டுமே குணமாகியுள்ளனர். 50 ஆயிரத்து 500 பேர் தொடர்ந்தும் சிகிச்சை பெற்று வருகின்றனர். மூவாயிரம் பேரின் நிலை கவலைக்கிடமாக இருக்கின்றது.

மற்றொரு ஐரோப்பிய நாடான ஸ்பெயினிலும் உயிரிழப்பு எண்ணிக்கை சீனாவின் எண்ணிக்கையை நெருங்கி வருகின்றது. 2 ஆயிரத்து 696 பேர் உயிரிழந்துள்ளனர். சீனாவில் 3 ஆயிரத்து 277 பேர் உயிரிழந்திருக்கின்றனர்.



சீனாவில் நோய் கட்டுக்குள் வந்திருந்தாலும் ஐரோப்பிய நாடுகளில் நோய்த் தொற்று கட்டுக்கடங்காமல் பரவி வருகின்றது. உயிரிழப்புக்களையும் ஏற்படுத்தி வருகின்றது.

196 நாடுகள் மற்றும் தன்னாட்சி நிலப்பரக்கள் இதுவரையில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளன.

வைரஸ் பரவல் தீவிரமடைந்து வருவதாக உலக சுகாதார நிறுவனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதனோம் ஜெப்ரேயிசஸ் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்தாவது: –

சீனாவில் கண்டுபிடிக்கப்பட்ட இந்த வைரஸ் உலக அளவில் முதல் 1 லட்சம் பேருக்கு பரவ 67 நாள்களை எடுத்துக்கொண்டது. அதைத்தொடர்ந்து, அடுத்த 11 நாள்களில் வைரஸ் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2 லட்சமாக அதிகரித்தது.

ஆனால், தற்போது வெறும் 4 நாட்களில் மேலும் 1 லட்சம் பேருக்கும் (மொத்தம் 3 லட்சம்) வைரஸ் பரவியுள்ளது. இதன் மூலம் கொரோனா வைரஸ் தீவிரமடைந்து வருகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது.

நாம் ஒன்றும் உதவியற்ற பார்வையாளர்கள் அல்ல. நாம் இந்த தொற்றுநோயின் பாதையை மாற்றலாம்.

மக்களை வீட்டில் இருக்க சொல்வதும் உடல் அளவில் ஒருவரை விட்டு ஒருவர் விலகி இருப்பதும் வைரஸ் பரவுவதை குறைக்கும். ஆனால் இவை அனைத்தும் தடுப்பு நடவடிக்கைகளே தவிர இந்த வைரசை வீழ்த்தி வெற்றியடைவதற்கான வழிமுறை அல்ல.

இதில் வெற்றியடைய வேண்டுமானால் குறிவைக்கப்பட்ட இலக்குகளையும், யுக்திகளையும் கொண்டு நாம் இந்த வைரசை மிகவும் ஆக்ரோமாக தாக்க வேண்டும்.

சந்தேகத்திற்குரிய அனைவரையும் பரிசோதனை செய்யுங்கள், வைரஸ் பாதிப்பு உறுதி செய்யப்பட்ட அனைவரையும் தனிமைப்படுத்தி அவர்கள் மீது அக்கறை செலுத்துங்கள்.

பாதிக்கப்பட்டவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்தவர்கள் அனைவரையும் உடனடியாக கண்டறிந்து அவர்களையும் தனிமைபடுத்துங்கள் – என்றார்.

## ஜப்பான் ஒலிம்பிக் போட்டி ஓராண்டுக்கு ஒத்திவைப்பு!

டோக்கியோ, மார்ச் 25

ஜப்பானின் டோக்கியோவில் வரும் ஜுலை 24 முதல் ஓகஸ்ட் 9 வரை நடக்க இருந்த ஒலிம்பிக் போட்டி 2021ஆம் ஆண்டுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

உலகம் முழுவதும் கொரோனா வைரஸ் வேகமாக பரவுவதால், அனைத்து தகுதிச் சுற்றுகளும் ரத்தாகின. வீரர், வீராங்கனைகள் பயிற்சியில் ஈடுபட முடியாமல் தவித்தனர். அமெரிக்கா, இங்கிலாந்து நட்சத்திரங்கள் உட்பட அந்த நாடுகளின் ஒலிம்பிக் குழுக்களும் போட்டியை தள்ளி வைக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுத்தன.

இருப்பினும் திட்டமிட்டபடி ஒலிம்பிக் நடக்கும் என கூறப்பட்டது. இதனிடையே கனடா மற்றும் ஆஸ்திரேலியா ஆகிய நாடுகள் இந்த ஆண்டு ஒலிம்பிக் நடந்தால் பங்கேற்கப் போவதில்லை என்று அறிவித்தன. வீரர்களினதும் மக்களினதும் பாதுகாப்புக்கே எல்லாவற்றையும்விட முன்னுரிமை என்று அவை அறிவித்தன. பல்வேறு



தரப்புகளிலும் இருந்து வந்த நெருக்கடிகளை அடுத்து, ஒலிம்பிக் போட்டி ஓராண்டுக்குத் தள்ளி வைக்கப்பட்டது.

இதுகுறித்து சர்வதேச ஒலிம்பிக் குழுத் தலைவர் தோமஸ் பாக்கிடம், ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே விவாதித்தார். அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப், தொலைபேசி வாயிலாக ஷின்சோ அபேயிடம் இது குறித்துப் பேச இருந்தார் என்று கூறப்பட்டது. இதையடுத்து ஒலிம்பிக்கை ஒரு ஆண்டு ஒத்தி வைக்க முடிவு செய்யப்பட்டது.

இது தொடர்பான அறிவிப்பை ஜப்பானியப் பிரதமர் நேற்று விடுத்தார்.

## இதுவரை 69 மருந்துகள் பரிசோதிக்கப்பட்டன

கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கு இதுவரையில் 69 வகையான மருந்துகள் பரிசோதிக்கப்பட்டுள்ளன என்று ஆராய்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

உயிர்க்கொல்லி நோயான கொரோனா வைரசை கட்டுப்படுத்த சரியான மருந்தைக் கண்டுபிடிப்பதற்கான முயற்சிகள் தீவிரமாக இடம்பெற்று வருகின்றன. பல்வேறு மருந்து, மாத்திரைகள் மூலம் இந்த நோயை கட்டுப்படுத்த முடியுமா? என ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்த வகையில் 69 வகை மருந்துகள் பரிசோதிக்கப்பட்டு உள்ளன. இந்தத் தகவலை ஆராய்ச்சியாளர்கள் குழு அறிவித்துள்ளது. ‘கொவிட் –19’ என பெயரிடப்பட்டுள்ள கொரோனா வைரசை கட்டுப்படுத்த ஏற்கனவே நடைமுறையில் உள்ள பல்வேறு மருந்து, மாத்திரைகள் பரிசோதிக்கப்பட்டுள்ளன.

புற்றுநோய், பக்கவாதம் மற்றும் ரத்த அழுத்தம் உள்ளிட்ட நோய்களுக்கு 24 வகை மருந்துகளை உணவு மற்றும் மருந்தியல் நிர்வாகம் பரிந்துரை செய்து அவை நடைமுறையில் உள்ளது. இந்த மருந்துகளும் கொரோனா வைரஸ் நோய்க்கு பரிசோதிக்கப்பட்டது. இந்த மருந்துகள் ‘செல்’களை தாக்கி உள்ள கொரோனா வைரசை அழிக்குமா? என்றும் ஆராய்ச்சியாளர்கள் கண்காணித்து வருகின்றனர்.

## இந்தியா, சீன எல்லைகளை மூடியது நேபாளம்

*கொரோனா பரவல் அச்சம் காரணமாக இந்தியா மற்றும் சீனா நாடுகளின் எல்லைகளை எதிர்வரும் 29ஆம் திகதி வரை மூடியது நேபாளம்.*

*சீனாவில் பரவத்துவங்கிய கொரோனா நோய் தொற்று உலகின் பல நாடுகளிலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. பலநாடுகளிலும் எல்லைப்பகுதிகள் மூடப்பட்டு வருகின்றன. ஐரோப்பிய ஒன்றியம் தனது எல்லையைமூடிவிட்டது.கனடா -அமெரிக்கா எல்லையும் மூடப்பட்டுவிட்டது.*

*இந்நிலையில் நேபாளநாட்டு அரசும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைளை மேற்கொண்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக இந்தியா மற்றும் சீனாவின் எல்லைகளை வரும் மார்ச் 29ஆம் திகதி வரை தற்காலிகமாக மூடியுள்ளதாக தெரிவித்துள்ளது.*

*ஆசியாவின் தெற்கு மற்றும் தென்கிழக்கு பகுதியில் உள்ள நாடுகள் கொரோனா வைரசால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன. பாதிப்பு அதிகரிக்காமல் இருக்கவும் முன்னெச்சரிக்கைக்காகவும் நேபாளத்தின் வடக்கு மற்றும் தெற்கு எல்லைகளை மூட அரசு முடிவு செய்துள்ளது.*

*மக்களின் எல்லை கடந்த போக்குவரத்தால் நேபாளத்தில் கொரோனா பரவுவதற்கு அதிகப்படியான வாய்ப்புள்ளது.. எனவே இந்தியா, சீனாவுடனான எல்லைகளை நேபாள அரசு தற்காலிகமாக மூடுகிறது. மார்ச் 23 முதல் மார்ச் 29 வரை இந்த தடை நீடிக்கும். எல்லைகள் மூடப்பட்டாலும் சரக்கு போக்குவரத்து தொடரும்.*

*இவ்வாறு நேபாளத்தின் நிதியமைச்சர் யுவராஜ் கத்திவாடா தெரிவித்தார்.*

## 3 வாரங்களுக்கு பிரிட்டனில் முழு அளவிலான முடக்கம்

### பிரதமர் போரிஸ் ஜோன்சன் அறிவிப்பு

கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கையாக இதுவரை பகுதியளவிலான கட்டுப்பாடுகளை மட்டுமே நடைமுறைப்படுத்தி வந்த பிரிட்டன் அடுத்த மூன்று மாதங்களுக்கு நாடு முழுவதையும் முழுமையாக முடக்கத் திட்டமிட்டுள்ளது.

பிரிட்டனிலும் நாட்டில் கொரோனா வைரஸ் வேகமாக பரவி வருகிறது. இதுவரை 335 பேர் உயிரிழந்திருக்கிறார்கள்.

நேற்றும் 54 பேர் உயிரிழந்தனர். இதுவரை 6 ஆயிரத்து 650 பேர் பாதிக்கப்பட்டு உள்ளனர்.

இந்த நிலையில் கொரோனா பரவாமல் தடுக்க பிரிட்டன் முழுவதும் 3 வாரங்களுக்கு முழுமையாக முடக்கப்படுவதாக அந்த நாட்டுப் பிரதமர் போரிஸ் ஜான்சன் அறிவித்தார்.

இது தொடர்பாக அவர் நாட்டு மக்களுக்கு தொலைக்காட்சியில் உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:–

கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கையாக பிரிட்டன் 3 வாரங்களுக்கு முடக்கப்படுகிறது. திருமணம் உள்ளிட்ட அனைத்து நிகழ்ச்சிகளையும் மூன்று வாரங்களுக்குத் தள்ளி வைக்க வேண்டும்.

உணவு, மருந்து ஆகிய அத்தியவாசிய பொருள்கள் விற்பனை செய்யும் கடைகள் திறந்து இருக்கும். அத்தியாவசிய பொருள்களை வாங்க மட்டுமே மக்கள் வீட்டை விட்டு வெளியே வர அனுமதிக்கப்படுவார்கள். பொது இடங்களில் இரண்டு பேருக்கு மேல் கூடினால் கடும் தண்டனை வழங்கப்படும்.

பிரிட்டிஷ் மக்களுக்கு நான் மிக எளிய வழி முறையை தெரிவிப்பது என்னவென்றால் வீடுகளிலேயே இருங்கள் என்பது தான். இதை நாம் கண்டிப்பாகக் கடைபிடிக்கவேண்டும்.

ஏனென்றால் வைரசை பரவாமல் தடுப்பதுதான் முக்கியமான விடயம். உங்களை நண்பர்கள் பார்க்க வேண்டும் என்று கூறினால் மறுத்து விடுங்கள்.

எந்தவொரு பிரதமரும் இதுபோன்ற நடவடிக்கை எடுக்க விரும்பமாட்டார். ஆனால் தற்போது எளிதான வழிகள் எதுவும் இல்லை.

முன்னோக்கி செல்லும் வழி கடினமானது. பல உயிர்கள் இழக்கப்படும் என்பதுதான் இன்னும் உண்மையாக இருக்கிறது.

# இந்தியா முழுவதையும் முடக்க 21 நாள்களுக்கு ஊரடங்கு உத்தரவு

## பிரதமர் மோடி நேற்று நாட்டு மக்களுக்கு உரை

*புதுடில்லி, மார்ச் 25*

*கொரோனா கட்டுப்பாட்டு நடவடிக்கையாக இந்தியா முழுவதும் 21 நாள்களுக்கு ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. நேற்றிரவு 8 மணிக்கு நாட்டு மக்களுக்கு உரையாற்றிய பிரதமர் நரேந்திர மோடி இந்த அறிவிப்பை விடுத்தார்.*

*21 நாள்களுக்கு ஊரடங்குச் சட்டத்தைக் கடைப்பிடிக்கவில்லை என்றால் 21 வருடங்களுக்குப் பின் தங்கியிருக்கவேண்டிய நிலை ஏற்படும் என்றார் அவர்.*

*உலகை அச்சத்தில் ஆழ்த்தி வரும் கொரோனா வைரஸ் தொற்று பாதிப்பு இந்தியாவில் கடந்த வாரத்திலிருந்து தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இந்திய சுகாதாரம் மற்றும் குடும்ப நல துறை தகவலின்படி இன்று (மார்ச் 24) மாலை நிலவரப்படி 519 பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர். இதில் 476 பேர் இந்தியர்கள், 43 பேர் வெளிநாட்டை சேர்ந்தவர்கள்.*

அதிகபட்சமாகக் கேரளாவில் 87 பேரும், மகாராஷ்டிராவில் 86 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில், கொவிட் –19 குறித்து நாட்டு மக்களிடம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை இரவு 8 மணிக்குப் பிரதமர் மோடி மீண்டும் பேசினார்.

கொரோனா வைரஸ் பாதிப்பு குறித்து மார்ச் 19ஆம் திகதி இரவு பிரதமர் நாட்டு மக்களுக்கு முதல் தடவையாக உரையாற்றியிருந்தார்.

அந்த உரையில் மார்ச் 22ஆம் திகதிய ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் மக்கள் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்படும் என அறிவித்திருந்தார். நேற்று அவர் மீண்டும் உரை நிகழ்த்துவதற்கு முன்பு மருத்துவர்களுடன் வீடியோ கான்பரசிங் மூலமாக ஆலோசனை நடத்தினார்.

அவர் தனது உரையில் தெரிவித்த முக்கிய விடங்கள் வருமாறு: –

நான் மீண்டும் கொரோனா தொற்று குறித்து உங்களிடம் பேச வந்துள்ளேன். ஒவ்வொரு இந்திய மக்களும் இணைந்து ஊரடங்கை வெற்றிகரமானதாக்கினீர்கள். குழந்தைகள், வியாபாரிகள், பெரியவர்கள், குழந்தைகள் என அனைவரும் இணைந்து கொரோனாவை எதிர்கொள்ள வேண்டும்.

இந்த முயற்சிகள் அனைத்தும் இருந்தும் கொரோனா தொற்று பரவல் அதிகரித்து வருகிறது. இந்த கொரோனா தொற்றை தடுப்பதற்கான ஒரே வழி சமூக இடைவெளி, விலகல் மட்டும்தான்.

கொரோனா தொற்றிலிருந்து தப்பிக்க இதை தவிர வேறு வழியில்லை

இந்த தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள் மட்டுமே தனித்திருக்க வேண்டும் என தவறாக நினைக்கின்றனர். ஆனால் ஒவ்வொரு குடிமகனும், ஒவ்வொரு



குடும்பமும் தனித்திருத்தலை கடைபிடிக்கவேண்டும்.

இன்று ஒரு முக்கிய முடிவை எடுக்க போகிறேன். இன்று இரவு 12 மணி முதல் இந்தியா முழுவதும், உள் முடக்கம் செய்யப்படுகிறது. ஒவ்வொரு கிராமமும், மாவட்டமும் முடக்கப்படுகிறது. இது மக்கள் ஊரடங்கை காட்டிலும் வலுவனாது.

உங்களிடம் கை கூப்பி வேண்டிக்கொள்கிறேன். தற்போது நீங்கள் நாட்டில் எங்கு உள்ளீர்களோ அங்கயே இருங்கள். இது 21 நாட்களுக்கு இந்த உத்தரவு தொடரும்.

21 நாட்களுக்கு வீட்டை விட்டு எங்கேயும் செல்லாதீர்கள். நீங்கள் வீட்டை விட்டு வெளியே சென்றால் கொரோனாவை உங்கள் வீட்டுக்கு அழைத்து வருவீர்கள்.

இந்தத் தொற்றால் பாதிக்கப்பட்ட ஒருவரால் நூற்றுக்கணக்கானவர்கள் பாதிக்கப்படலாம் என் உலக சுகாதார நிறுவனம் தெரிவிக்கிறது.

67 நாட்களில் ஒரு லட்சம் மக்கள் இந்த தொற்றால் பாதிக்கப்பட்டனர். ஆனால் அடுத்த 11 நாட்களில் அது இரண்டு லட்சம் ஆனது. அடுத்த நான்கு நாளில் மூன்று லட்சத்தை தொட்டது.

இந்த கொரோனா தொற்றை தடுப்பது மிகவும் கடினமானது.

இந்த 21 நாட்களை நாம் சமாளிக்கவில்லை என்றால் 21 ஆண்டுகள் நாம் பின் தள்ளப்படுவோம். ஊரடங்கு நேரத்தில் அரசுக்கு முழு ஒத்துழைப்பு தாருங்கள்.

இந்த சமயத்தில்தான் நமது நடவடிக்கைகள் தான் இந்த கொரோனா தொற்றை தடுக்கும். வீட்டிலேயே இருங்கள் இந்த கொரோனா தொற்றுக்காக பணிபுரியும் மருத்துவ பணியாளர்கள் குறித்து சிந்தியுங்கள்.

இந்த கொரோனா தொற்றை சமாளிக்க ஆம்புலன்ஸ் டிரைவர் உள்ளிட்டோர் நமக்காக பணியாற்றுகின்றனர்.

ஊடகவியாளர்கள் குறித்தும் நீங்கள் யோசிக்க வேண்டும் உங்களுக்கு சரியான தகவல்களை தர அவர்கள் பணிபுரிகின்றனர்.

போலீஸார் குறித்து யோசியுங்கள் உங்களை காப்பாற்ற அவர்கள் 24 மணி நேரமும் பணி செய்கின்றனர்.

அத்தியாவசிய பொருட்கள் தங்கு தடையின்றி கிடைக்க ஏற்பாடு செய்து வருகிறோம்.

நாட்டின் சுகாதாரக் கட்டமைப்பை வலுவாக்க 15,000 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த சமயம் சுகாதார சேவைக்கே முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என மாநில அரசுகளிடம் நான் வலியுறுத்தியுள்ளேன் – என்றார் அவர்.

# முகக் கவசத் தட்டுப்பாட்டுக்கு ஆளும் பா.ஜ.க. அரசே பொறுப்பு

காங்கிரஸ் கட்சி குற்றச்சாட்டு

கொரோனா வைரஸ் பாதிப்பை கட்டுப்படுத்துவதற்கான பொருளாக மக்களால் பயன்படுத்தப்படும் முகக் கவசங்களுக்கு இந்தியாவில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டுக்கு மத்தியில் ஆட்சியில் உள்ள பாரதீய ஜனதாக் கட்சி அரசுதான் காரணம் என்று குற்றஞ்சாட்டியுள்ளது காங்கிரஸ் கட்சி.

இந்தியாவில் கொரோனா வைரஸ் வேகமாக பரவி வரும் நிலையில் அதிலிருந்து தப்பிக்க மக்கள் முககவசம் வாங்கி அணிந்து கொள்ள விரும்புகிறார்கள். ஆனால் எந்த மருந்து கடையிலும் முககவசம் கிடைக்கவில்லை. நாட்டில் அனைத்து பகுதிகளிலும் இதே நிலைதான் உள்ளது.

கடந்த 20 நாட்களுக்கு மேலாக முககவசம் விநியோகம் முற்றிலும் நின்றுவிட்டதாக மருந்து கடைக்காரர்கள் கூறுகின்றனர்.

இதுசம்பந்தமாக காங்கிரஸ் செய்தி தொடர்பாளர் ரன்தீப் சூரஜ்வாலா ஒரு அறிக்கை வெளியிட்டுள்ளார். அதில் கூறியிருப்பதாவது:–

கொரோனா நோய் தாக்குதலால் அசாதாரண சூழ்நிலை நிலவும் என்று தெரிந்ததுமே உரிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்திருக்க வேண்டும். அதாவது மக்கள் பயன்பாட்டுக்கான முககவசம், மருத்துவர்கள், தாதியர்கள் பயன்படுத்துவதற்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள், கவச உடைகள், சுவாச கருவிகள் போன்றவற்றை தயாராக வைத்திருக்க வேண்டும்.

ஆனால் இவை அனைத்தும் இந்தியாவில் உற்பத்தி ஆன நிலையிலும் அவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அனுமதித்துள்ளனர். மார்ச் 19ஆம் திகதி வரை ஏற்றுமதிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

இப்போது அந்த பொருட்கள் எதுவும் இந்தியாவில் கிடைக்கவில்லை. பாதிப்பு வரும் என்று தெரிந்த பிறகும் முன்னெச்சரிக்கையாக செயல்பட்டு இதுபோன்ற பொருள்கள் ஏற்றுமதி செய்வதை தடுப்பதற்கு மத்திய வணிகத்துறை அமைச்சர், வணிக செயலாளர் போன்றோர் தவறிவிட்டனர்.

சர்வதேச அளவில் கச்சா எண்ணை விலை கடுமையான வீழ்ச்சியை சந்தித்து வரும் வேளையில் அதன் பயன் மக்களுக்கு கிடைக்க வேண்டும். ஆனால் லிட்டருக்கு 8 ரூபாய் கலால் வரி உயர்த்தி லாபம்பார்க்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது தவறானது.

மக்களை இதுபோன்று கஷ்டப்படுத்துவது இந்த அரசுக்கு வாடிக்கையாக உள்ளது. எல்லாவற்றிலும் வியாபார நோக்கம் தான் அவர்களுக்கு குறிக்கோளாக இருக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.






# ஊடக அமைப்புகளின் கூட்டணி எச்சரிக்கை!

## விநியோகிக்கப்படும் பத்திரிகைகள் மூலமும் கொரனோ வைரஸ் பரவுவதற்கு வாய்ப்புண்டு

### இலத்திரனியல் தளங்கள் மூலம் செய்திகளை பொதுமக்களுக்கு வழங்குவதற்குப் பரிந்துரை

“பகிர்ந்தளிக்கப்படும் (விநியோகிக் கப்படும்) பத்திரிகைகள் மூலம் வைரஸ் பரவலாம். அப்படிப் பரவாதிருப்பதை உறுதி செய்வது மக்களின் பாதுகாப்புக்கான உத்தரவாதமென்று நாம் கருதுகின்றோம். உங்கள் ஊடகத்தின் இணையத்தளம் மற்றும் ஏனைய இலத்திரனியல் தளங்கள் மூலம் பொதுமக்களுக்கு செய்திகள் சென்றடைய வழிவகைகளை மேற்கொள்வதோடு, பத்திரிகைகளை பகிர்ந்தளிக்கும் போது அதிக பொறுப்புடன் செயற்படல் வேண்டும்.”

– கொரானோ பரவலை ஒட்டி ஊடக அமைப்புகளின் கூட்டணி அனைத்து ஊடகங்களுக்கும் அனுப்பி வைத்துள்ள வழிகாட்டல் அறிக்கையில் இவ்வாறு எச்சரிக்கை விடுத்திருக்கின்றது.

சுதந்திர ஊடக இயக்கம், இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர்கள் சங்கம், ஊடக ஊழியர்களின் தொழிற்சங்க சம்மேளனம், ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரம், தமிழ் ஊடக ஒன்றியம், ஸ்ரீ லங்கா இளம் ஊடகவியலாளர்கள் சங்கம் ஆகியவற்றின் பிரதிநிதிகள் ஒப்பமிட்டு நேற்று அனுப்பி வைத்த அறிக்கையிலேயே இப்படி பரிந்துரை செய்யப்பட்டிருக்கின்றது.

'கோவிட் – 19 தொற்றுக்கு எதிராக செயற்பாடுகளில் ஊடகங்களின் பொறுப்பு' தொடர்பாக என்ற தலைப்பில் ஊடக உரிமையாளர்



கள் மற்றும் அதன் பிரதானிகளுக்கு அந்த வழிகாட்டல் அறிக்கை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

அதன் முழு விவரம் வருமாறு:–

அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் உரிமையாளர்கள், பிரதானிகளுக்கு!

கோவிட் – 19 வைரஸ் உலக அளவில் பரவி வரும் இந்த சூழ்நிலையில் இலங்கைக்கும் அதன் பாதிப்பு அதிகமாக உள்ளது. இவ்வாறான பின்னணியில் சரியான மற்றும் நம்பிக்கையான செய்திகளை வெளியிடுவது மக்களின் தகவல் அறிந்துகொள்ளும் உரிமையைப் பாதுகாக்கும் வகையில் அனைத்து ஊடகங்களும் மேற்கொள்ளும் நடவடிக்கை பொறுப்பு மற்றும் பாராட்டத்தக்கதாகும்.

நாட்டு நிலைமை சீராகும் வகையில் ஊடகங்களுக்குள்ள அந்தப் பொறுப்பை முறையாக நிறைவேற்றி, இந்த அனர்த்தத்துக்கு எதிராக செயற்பட வேண்டும் என்பதே இலங்கையிலுள்ள ஊடக அமைப்புகளின் எதிர்பார்ப்பாகும்.

அதேநேரம், விசேடமாக பத்திரிகைத் துறை உட்பட ஊடகத்துறை மற்றும் அதன் இருப்பைப் பாதுகாத்துக் கொள்வது முக்கியமாகும் என்பதையும் நாம் வலியுறுத்துகின்றோம்.

எனவே, இந்த அனர்த்த நிலைமையில் முக்கியமாக கவனம் செலுத்த வேண்டிய மற்றும் செயற்படுத்த வேண்டிய விடயங்களை இங்கே உங்களது அவதானத்துக்குக் கொண்டுவருகின்றோம்.

இலங்கை அரசாங்கம் வீட்டிலிருந்து பணியாற்றும் காலத்தை பிரகடனப்படுத்தியுள்ள நேரத்தில், அத்தியாவசியமான பணியாளர்களையும் ஊடகவியலாளர்களையும் நிறுவனத்திற்கு அழைத்தும், ஏனையோருக்கு ஒன்லைன் மூலம் வேலை செய்வதற்குரிய ஏற்பாடுகளைச் செய்வதன் மூலம் அவர்கள் பாதிக்கப்படுவதும் மற்றும் நோய்ப் பரவுதலும் கட்டுப்படுத்தப்படுகின்றது.

பத்திரிகைகள் வெளியிடும் போது மக்களிடையே வைரஸ் பரவல் ஏற்படுவதைத் தடுக்க உரியவர்களின் ஆலோசனைகளைப் பெறும் அதேவேளை, இலத்திரனியல் உபகரணங்களின் பாவனையிலும் உரிய தரத்துடன் மேற்கொள்ள ஆலோசனை வழங்குதல் முக்கியமாகும்.

அனைத்து ஊழியர்களினதும் போக்குவரத்துக்காக பயன்படுத்தப்படும் வாகனங்களில் வைரஸ் நீக்கம் செய்யப்படுவது அவசியமாவதுடன், அலுவலக இயந்திரங்களைச் சுத்தம் செய்யும் போதும்

நிதஹஸ் மாத்ய வ்யாபாரய
FMM Sri Lanka
சுதந்திர ஊடக இயக்கம்
Free Media Movement

“பகிர்ந்தளிக்கப்படும் (விநியோகிக்கப்படும்) பத்திரிகைகள் மூலம் வைரஸ் பரவலாம். அப்படிப் பரவாதிருப்பதை உறுதி செய்வது மக்களின் பாதுகாப்புக்கான உத்தரவாதமென்று நாம் கருதுகின்றோம். உங்கள் ஊடகத்தின் இணையத்தளம் மற்றும் ஏனைய இலத்திரனியல் தளங்கள் மூலம் பொது மக்களுக்கு செய்திகள் சென்றடைய வழிவகைகளை மேற்கொள்வதோடு, பத்திரிகைகளை பகிர்ந்தளிக்கும்போது அதிக பொறுப்புடன் செயற்படல் வேண்டும்.”

அதற்குரிய பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்வது முக்கியமாகின்றது.

நோயைக் கட்டுப்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்டுள்ள தேசிய இயக்கம் தினமும் ஊடக கலந்துரையாடல்களை நடத்துகின்றது. அங்கு முன்வைக்கப்படும் தகவல்கள் மக்களைச் சென்றடைய வேண்டியது கட்டாயமாகும். எனினும், அவ்வாறான செய்தியாளர் மாநாடுகளில் பங்கேற்கும் அலுவலக, பிராந்திய ஊடகவியலாளர்களின் சுகாதாரப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது அவசியமாகும்.

விசேடமாக தொலைக்காட்சி ஊடகவியலாளர்கள் மைக்ரபோன் பாவனையுடன் அதிகாரிகளுடனும் பொதுமக்களுடனும் நெருங்கித் தகவல்களைக் கோரும் சந்தர்ப்பத்தில், சிலபோது மருத்துவ முகக்கவசம் அணிந்தும், அணியாமலும் செயற்படுகின்றமையைத் தொலைக்காட்சிகளில் காண முடிந்தது. இவ்விடயத்தில் ஊடகவியலாளர்கள் தெளிவுபடுத்தப்பட வேண்டும் என்பதோடு மைக்ரபோனை உரிய விதத்தில் சுத்தப்படுத்திப் பயன்படுத்தவும் ஆலோசனைகள் வழங்கப்பட வேண்டும்.

கோவிட் – 19 வைரஸின் ஆயுள்காலம் சில மணிநேரங்கள் அல்லது சில நாள்களாக இருக்கக் கூடும் என்றும் அது பல்வேறு பதார்த்தங்களோடு பரவக்கூடிய வாய்ப்பிருப்பதாக வைத்திய அதிகாரிகள் கூறுகின்றனர்.

எனவே, நாடு பூராகவும் பகிர்ந்தளிக்கப்படும் (விநியோகிக்கப்படும்) பத்திரிகைகள் மூலம் வைரஸ் பரவாதிருப்பதை உறுதி செய்வது மக்களின் பாதுகாப்புக்கான உத்தரவாதமென்று நாம் கருதுகின்றோம். உங்கள் ஊடகத்தின் இணையத்தளம் மற்றும் ஏனைய இலத்திரனியல் தளங்கள் மூலம் பொதுமக்களுக்கு செய்திகள் சென்றடைய வழிவகைகளை மேற்கொள்வதோடு, பத்திரிகைகளை பகிர்ந்தளிக்கும் போது அதிக பொறுப்புடன் செயற்படல் வேண்டும்.

இந்த அனர்த்த சூழ்நிலையில் மேற்படி விடயங்களில் உங்கள் பங்களிப்பானது முழு நாட்டு மக்களினதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் என்பதை நினைவுகூருகின்றோம். எனவே, ஊடக அமைப்புகளின் கூட்டணி மூலம் முன்வைக்கப்பட்டுள்ள விடயங்களில் அதிக கவனம் செலுத்துமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

சுதந்திர ஊடக இயக்கத்தின் தலைவர சீ.தொடாவத்த, ஊடக ஊழியர்களின் தொழிற்சங்க சம்மேளனத்தின் பிரதான செயலாளர் தர்மசிறி லங்கா பேலி, இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர்கள் சங்கத்தின் தலைவர் துமிந்த சம்பத், ஸ்ரீ லங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் என்.எம். அமீன், இலங்கை இளம் ஊடகவியலாளர்கள் சங்கத்தின் தலைவர் ஆதில் அலி சப்ரி, தமிழ் ஊடக ஒன்றியத்தின் செயலாளர் கணபதிபிள்ளை சர்வானந்தா ஆகியோர் இந்த அறிக்கையில் ஒப்பமிட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

# யாழ்ப்பாணத்தில் சந்தைகளில் அலை மோதிய மக்கள் கூட்டம்











யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ்ப்பாணத்தில் கடந்த 84 மணித்தியாலங்கள் நடைமுறையிலிருந்த ஊரடங்குச் சட்டம் நேற்றுச் செவ்வாய்க்கிழமை 8 மணித்தியாலங்கள் தளர்த்தப்பட்ட நிலையில் மக்கள் அத்தியாவசியப் பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்கு அலை மோதினர்.

மாவட்டத்திலுள்ள அனைத்துச் சந்தைகளிலும் வர்த்தக நிலையங்களிலும் மக்கள் குவிந்தனர்.

எனினும் பல்பொருள் அங்காடிகள், வங்கிகள், மருந்தகங்களில் பொலிஸாரின் அறிவுறுத்தலில் ஒவ்வொருவருக்கும் இடையே ஒரு மீற்றர் இடைவெளியில் வரிசையில் காத்திருந்தனர்.

வீதி ஒழுங்குகளில் பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் சிறப்பு அதிரடிப்படையினர் ஈடுபட்டுள்ள நிலையிலும் நகரங்களில் வாகன நெரிசல் காணப்பட்டது.

பொதுச்சந்தைளில் மக்களை ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகளில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் கடும் முயற்சிகளை முன்னெடுத்தபோதும் அவர்களால் கட்டுப்படுத்த முடியவில்லை. (ஐ - 07)

# ஊரடங்கு அமுலில் உள்ளவேளை மருந்தகங்களைத் திறக்க அனுமதி

கொழும்பு, மார்ச் 24

நாடு முழுவதும் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ள வேளையில் மருந்தகங்களைத் திறப்பதற்கு அனுமதியளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

ஊரடங்கு தளர்த்தப்படும் வேளையில் பொது மக்கள் மருந்தகங்களிலும் கூடுவதால் ஏற்படும் நெருக் கடியைக் குறைக்கும் வகையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று சுகாதார அமைச்சு தெரிவித் துள்ளது.

இதேவேளை, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நடமாடும் மருந்துப் பொருள்கள் விநியோகத்தை முன்னெடுக்க மாவட்ட மருந்தக உரிமையாளர்கள் சிலர் இணங்கியுள்ளனர் என்று மாவட்ட செயலாளர் க.மகேசன் தெரிவித்துள்ளார். (ஐ)

காலைக்கதிர் Kalaikathir

மழலைகளின் பொழுதினை பயனுள்ளதாக்குவோம்




தினம் ஒரு தலைப்பு

சித்திரப்போட்டி

இன்றைய (25/03/2020) தலைப்பு
ஊரடங்கும் ஊர்மக்களும்

ஒவ்வொரு நாளுக்குரிய தலைப்பும் முதல் நாள் மாலையில் தரப் படும். அத்தலைப்புக்குப் பொருத்தமான சித்திரத்தை அன்று மாலை 6 மணிக்கு முன்னதாக எமது மின்னஞ்சலுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

* சித்திரத்தினை A4 அளவுள்ள வெள்ளைத்தாளில் வரைய வேண்டும்.
* சித்திரங்கள் வர்ணத்தில் அல்லது கருப்பு வெள்ளையாக அமையலாம்.
* தெரிவுசெய்யப்படும் சித்திரங்கள் காலைக்கதிரின் முகப் புத்தகத்தில் பகிரப்படும்.
* தினமும் தெரிவுசெய்யப்படும் தரமான ஒரு சித்திரம் காலைக்கதிர் பத்திரிகையில் பிரசுரமாகும்.
* போட்டி முடிவில் பரிசுக்குரிய சித்திரங்களுக்கு பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

சித்திரங்கள் தெளிவான முறையில் படம்பிடிக்கப்பட்டு வரைந்த மாணவரின் பெயர், பாடசாலை, தரம், பெற்றோரின் தொலைபேசி இலக்கம் ஆகிய விபரங்களுடன் kalaikkathiredu@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு: 076 443 8623

# போதகருடன் நெருங்கிப் பழகிய 18 பேர் பலாலி தனிமைப்படுத்தல் மையத்தில்!

யாழ்ப்பாணம், மார்ச் 25

யாழ்ப்பணத்தில் கொரோனா தொற்றுக்கு உள்ளான சுவிஸ் மதபோதகருடன் நேரடித் தொடர்பிலிருந்தனர் என அடையாளம் காணப்பட்ட 18 பேர் தனிமைப்படுத்தல் மையத்துக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

பலாலியில் அமைக்கப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் மையத்துக்கு இரண்டு கட்டங்களாக இவர்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர் என யாழ். மாவட்ட செயலர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்ட செயலகத்தில் அவர் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், யாழ்ப்பாணம், அரியாலையில் ஆராதனைக் கூட்டம் நடத்துவதற்கு சுவிஸிலிருந்து வந்த மதபோதகருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டது.

அவருடன் ஓர் அறையில் தனித்துச் சந்தித்த தாவடி வாசிக்கும் கொரோனா இருப்பது உறுதியானது. இதனையடுத்து மதபோதகருடன் நெருங்கிப் பழகிய 18 பேர் அடையாளப்படுத்தப்பட்டனர்.

இவர்களில் 12பேர் கடந்த ஞாயிறு காலையும் எஞ்சிய 6 பேர் அன்றையதினம் மாலையும் தனிமைப்படுத்தல் மையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தீவிர கண்காணிப்பில் உள்ளனர் - என்றார். (ஐ - 07)

SRI MURUGAN
COMMUNICATION & AGENCY POST OFFICE

உலகெங்குமிருந்து

உறவுகளிடமிருந்து அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக் கொள்ள இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ்; அதிவிரைவு பாதுகாப்பு நம்பகத் தன்மை.

உறவுகளுக்கு தபால்கள் பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப

WESTERN UNION WU
மூலமாக அனுப்பப்படும் பணத்தை பாதுகாப்பாக எம்மிடம் பெற்று பயணப் பையினை பரிசாக வெல்லுங்கள்.

No.303, K.K.S Road, Jaffna SriLanka Tel : 021 222 2670 / 5392
Email : SriMurugan09@gmail.com Fax:021 222 3214
Srimurugan303@gmail.com

# வறியவர்களின் நெருக்கடியைப் போக்க அரசு காத்திரமாக எதுவும் செய்யவில்லை

## விக்கி குற்றச்சாட்டு; சமூகப் பொறுப்புடன் பணியாற்ற அழைப்பு

யாழ்ப்பாணம்,மார்ச் 25

“வடக்கு கிழக்கில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்துவரும் ஏராளமான குடும்பங்கள் தமது நாளாந்த உணவினைப் பெற்றுக்கொள்வதற்குப் பெரும் சிரமத்தினை எதிர்கொண்டு வருகின்றன. இந்த மக்களின் துன்பங்களைப் போக்குவதற்கு அரசாங்கம் காத்திரமான நடவடிக்கைகள் எவற்றையும் எடுத்திருப்பதாக நான் அறியவில்லை.”

– இவ்வாறு தெரிவித்திருக்கின்றார் வடமாகாண முன்னாள் முதலமைச்சரும், தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும், தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவருமான நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்.

’இல்லாதவர்களுக்கும், பாதிக்கப்பட்டவர்களுக்கும் சமூக பொறுப்புடன் உதவுவோம்’ என்ற தலைப்பில் அவர் நேற்று வெளியிட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்திருக்கின்றார். அதில் அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:–

கொரோனா தொற்று நோய் பரவலைத்தடுக்கும் பொருட்டான ஊரடங்கு உத்தரவு காரணமாகவும், வர்த்தக, விவசாய, மீன்பிடி மற்றும் உற்பத்தி செயற்பாடுகளின் இடைநிறுத்தம் காரணமாகவும், தொழில் வாய்ப்புக்களை இழந்து இதுவரை நாளாந்த வருமானத்தை நம்பி வாழ்ந்துவந்த பல குடும்பங்கள் மோசமாகப் பாதிப்படைந்துள்ளன. இன்றும் சில சனசமூக நிலையங்கள் எம்மிடம் உதவி நாடி நின்றன. பொருள்களின் பற்றாக்குறை மற்றும் விலை உயர்வு காரணமாக வடக்கு, கிழக்கில் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்ந்துவரும் ஏராளமான குடும்பங்கள் தமது நாளாந்த உணவினை பெற்றுக்கொள்வதற்குப் பெரும் சிரமத்தினை எதிர்கொண்டுவருகின்றன என அறிய முடிகின்றது.

இந்த மக்களின் துன்பங்களை போக்குவதற்கு அரசாங்கம் காத்திரமான நடவடிக்கைகள் எவற்றையும் எடுத்திருப்பதாக நான் அறியவில்லை. அரசாங்கம் சில நடவடிக்கைகளை எடுத்தால் கூட அவை இந்த மக்களின் துன்பங்களை முழுமையாக போக்கும் வகையில் அமையப்போவதில்லை. ஆனால், நாம் அனைவரும் தமிழ்த் தாயின் பிள்ளைகள் என்ற உணர்வுடனும் சமூகப் பொறுப்புணர்வுடனும் எமது சக உறவுகள் பசியிலும் பட்டினியிலும் வீழ்ந்து விடாமல் கை கொடுத்து உதவ வேண்டியது எமது கடமை.

ஒவ்வொருவரும் உங்களைச் சுற்றி இருக்கும் ஏழை, எளியவர்கள் உணவு உண்ணுகின்றார்களா, அவர்களின் குழந்தைகள் பிள்ளைகளுக்கு பால் மாவும், வயோதிபர்களுக்கு மருந்துகளும் கிடைக்கின்றனவா என்று ஆராய்ந்து பாருங்கள். மனிதாபிமான உணர்வுடனும் சகோதர பாசத்துடனும் இருக்கப் பழகிக் கொள்ள வேண்டும்.

எனதினிய உறவுகளே! உங்களால் முடிந்தளவுக்கு பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்யுங்கள். அவர்களுக்கு உதவி செய்யும் நிலைமை உங்களுக்கு இல்லை என்றால் உதவி செய்யக் கூடியவர்களுக்கோ, அதிகாரிகளுக்கோ அவர்களின் கஷ்டங்களை எடுத்து சொல்லுங்கள்.

வறுமைக்கோட்டின் கீழ் வாழ்கின்றவர்களையும் கொரோனா நெருக்கடியினால் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளவர்களையும் அடையாளம் கண்டு அவர்களுக்கு உதவுகின்ற அல்லது ஆதரவு அளிக்கின்ற நடைமுறைகளை வர்த்தகர்கள் பின்பற்றவேண்டும். வெளிநாடுகளில் கடை திறந்த முதல் இரண்டு மணி நேரங்களில் முதியவர்கள் தமக்கு தேவையான பொருள்களைக் கொள்வனவு செய்வதற்கும் தட்டுப்பாடு நிலவுகின்ற பொருள்களை பெற்றுக்கொள்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. ஆகவே, ஏழை மக்கள் அத்தியாவசிய பொருள்களை நியாயமான அல்லது குறைந்த அத்தியாவசிய விலையில் பொருள்களை பெற்றுக்கொள்வதற்கு மனச்சாட்சியின்படி நாங்கள் நடந்து கொள்வோமாக!

அதேபோல, செல்வந்தர்களும் நன்கொடையாளர்களும் புலம்பெயர் உறவுகளும் உதவி அமைப்புக்களின் ஊடாக இந்த மக்களுக்கு கை கொடுப்பதற்கு முன்வரவேண்டும். சில உதவி அமைப்புக்கள் இவ்வாறு பாதிக்கப்பட்டவர்களை அடையாளம் கண்டு உதவி செய்யும் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்கள். ஆனால் தேவை மிகவும் அதிகமாக இருப்பதால், இருப்பவர்களிடம் அவர்கள் உதவிகளை வேண்டி நிற்கின்றார்கள்.

சிறு துளி பெரு வெள்ளம் என்பார்கள். பண ரீதியாகவோ அல்லது பொருள் ரீதியாகவோ நாம் அனைவரும் மேற்கொள்ளும் சிறு சிறு உதவிகள் இந்த மனிதாபிமான நெருக்கடியினைக் களைவதற்கு நிச்சயம் உதவ முடியும். யுத்த காலங்களில் இடம்பெயர்ந்த மக்களுக்கு ஏற்பட்ட துன்பங்களை நீக்குவதற்கு எமது பாடசாலை மாணவர்களும் பல்கலைக்கழக மாணவர்களும் சாரணிய குழுக்களாகவும் ஏனைய பல மாணவர் அமைப்புக்களாகவும் செயற்பட்டு மகத்தான செயற்பாடுகளை முன்னெடுத்தனர் என நான் அறிகின்றேன். அதே போல, தற்போது ஏற்பட்டுள்ள மனிதா பிமான நெருக்கடி நிலைமையினைத் தீர்ப்பதற்கு எமது இளையோர்கள் குறிப்பாக பல்கலைக்கழக மாணவர்களும், உயர்கல்லூரி மாணவர்களும் ஒழுங்கமைக்கப்பட்ட திட்ட மிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முன்வர வேண்டும். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மற்றும் நிபுணர்களின் வழிகாட்டுதல்களின் கீழ் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வது பற்றி சிந்திக்க வேண்டும் என்று வேண் டிக்கொள்கின்றேன். நிச்சயமாக இத்தகைய நடவடிக்கை களுக்கு எமது நன்கொடையாளர்களும் புலம்பெயர் உறவுகளும் உதவி செய்வார்கள் என்று நம்புகின்றேன். எமது நம்பிக் கைப்பொறுப்பும் இது பற்றி ஆராய்ந்து வருகின்றது.




# ஊரடங்கைக் காலவரையறையின்றி நீடித்து வழங்கலை நடமாடும் சேவை மூலம் செய்க!

## சஜித் அணியின் முதன்மை வேட்பாளர் கணேஸ்வரன் வேலாயுதம் கோரிக்கை

(இக்பால் அலி)

கொரோனா தொற்று பரவுவதிலிருந்து மக்களை பாதுகாத்தல் விடயத்தில் வட மாகாண ஆளுநர் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் யாழ் மாவட்ட முதன்மை வேட்பாளர் கணேஸ்வரன் வேலாயுதம் கோரிக்கை விடுத்துள்ளார்.

நேற்று ஏனைய மாகாணங்களில் காவல் துறை ஊரடங்கு தளர்த்தப்பட்ட வேளையில் பொது மக்கள் ஒழுங்கு முறையில் அத்தியாவசியப் பொருள்களை கொள்முல் செய்வதை காணக் கூடியதாக இருந்தது.

அதேவேளையில், இன்று(நேற்று) யாழ்ப்பாணத்தில் ஊரடங்கு தளர்த்தப்பட்ட நிலையில் சனங்கள் அத்தியாவசிப் பொருள்களைக் கொள்முதல் செய்த வேளையில், எந்விதமான ஒழுங்கு முறைமையின்றி கட்டுக் கடங்காமல் பொருள்களை சனங்கள் முண்டியடித்துக் கொண்டு கொள்முதல் செய்தமையைக் காணக் கூடியதாக இருந்தது..

யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத் தீவு, கிளிநொச்சி ஆகிய ஆகிய இடங்களில் காவல் துறை ஊரடங்குச் சட்டம் காலை 6.00 மணி முதல் பி.ப 2.00 வரையிலும் தளர்ப்பட்டிருந்தது.

இந்நேரத்தில் ஒரே நாளில் பல்லாயிரக் கணக்கான மக்கள் தமது அன்றாட வாழ்வுக்கான அத்தியாவசியப் பொருள்களை கொள்வனவு செய்வதற்காக வர்த்தக நிலையங்களில் அதிகளவில் கூடி நின்று பொருள்களை கொள்முதல் செய்து கொண்டிருந்தார்கள். அவர்களிடம் கொரோனா வைரஸ் தொற்றில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான எந்தவிதமான ஒழுங்கு முறையும் காணப்பட வில்லை. இவ்வாறு பொருள்களைக் கொள்முதல் செய்வதன் மூலம் நோய் தொற்றுவதற்கான வாய்ப்பு அதிகம். இது தொடர்பாக வட மாகாண ஆளுநருக்கு கோரிக்கையொன்றை விடுத்திருந்தோம். ஆனால் அது தொடர்பில் எந்தவிதமான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

எனவே இந்த இடத்தில் காவல் துறையினரின் கண்காணிப்பு மிக அவசியமாகும். காவல் துறை ஊரடங்கு சட்டத்தை தளர்த்தாமல் நீடிக்க வேண்டும். மக்களுக்கான அத்தியாவசிய பொருள்களை விற்பனை செய்வதை நடமாடும் சேவையாக மேற்கொள்ளுமாறு இது தொடர்பில் அரசாங்க அதிபர் மற்றும் வட மாகாண ஆளுநரிடம் நேற்று கோரியொன்றை விடுத்துள்ளோம்.

மக்கள் வீடுகளில் தத்தமக்கு தேவையான பொருள்களைப் பெற்றுக் கொள்வதற்காக நடமாடும் விற்பனை நிலையம் தற்போது கூட்டுறவு சங்கக் கடைகள் மூலம் புத்தளம் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படுகின்றது. இதனை வட மாகாணத்திலும் முன்னெடுக்குமாறு கோரிக்கை விடுக்கின்றோம்.

புத்தளம் முழுவதும் அத்தியாவசியப் பொருள்களை விற்பனை செய்யும் கூட்டுறவுச் சங்கங்களினால் ஏற்படுத்தப்பட்ட நடமாடும் சேவையின் மூலம் மக்கள் தமக்கான தேவையான உணவுப் பொதிகளை பணத்தை கொடுத்து பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதனால் நகருக்கு வந்து கியூ வரிசையில் நிற்காமல் தங்களுடைய கிராமங்கள், வீடுகளிலே இருந்து உணவுப் பொருள்களைத் தற்போது பெற்றுக் கொள்கின்றார்கள்.

அந்த வகையில் மக்கள் ஒருவரை ஒருவர் நெருங்கி கியூ வரிசையில் நிற்பதும், சந்திப்பதும் தவிர்க்கப்படும் என்பதுடன் வைரஸ் பரவுவதைக் குறைப்பதற்கு அது வாய்ப்பாகவும் அமையும்.

எனவே காலத்தின் தேவை கருதி தொடர்ந்து ஊரடங்கு சட்டத்தை தொடர்ந்து இடை விடாமல் அமுல்படுத்துவதன் மூலம் கொரோனா தொற்று நோய் பரவுதலை கட்டுப்படுத்த முடியும் எனவும், நடமாடும் உணவு விநியோகத்தை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுப்பதுடன் இந்த நடவடிக்கையினை துரிதமாகவும் விரைவாகவும் முன்னெடுக்குமாறும் வேண்டுகிறேன் – இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார்.

# அலரி மாளிகையில் நேற்று நடந்த கட்சித் தலைவர்களின் கூட்டத்தில்!





கொரோனா நோய்த் தொற்றுத் தடுப்பு சம்பந்தமாக நேற்று பிரதமர் மஹிந்த ராஜ பக்ஷ தலைமையில் நடைபெற்ற கட்சித் தலைவர்கள் மாநாட்டின் போது எடுக்கப்பட்ட படங்கள்..







## தினம் ஒரு தலைப்பு சித்திரப்போட்டி

**மழலைகளின் பொழுதை பயனுள்ளதாக மாற்றுவோம்**

நேற்றைய தினம் எமக்கு சித்திரங் களை அனுப்பிவைத்த அனைவருக்கும் நன்றி. நேற்றைய போட்டி 'கொரோனோ எனும் அசுரன்' என்ற தலைப்பில் இடம் பெற்றது.

பெரும் எண்ணிக்கையான மாண வர்கள் ஆர்வத்துடன் பங்குபற்றினர்.

அவர்கள் அனுப்பி வைத்தவற்றில் தெரிவுசெய்யப்பட்ட இரு சித்திரங்கள் வாசகர்களாகிய உங்களின் பார்வைக்கு.

படம்1

வரைந்தவர்

எஸ்.சிவகலை, தரம் 4,

யா/இடைக்குறிச்சி ஸ்ரீசுப்பிரமணியம் வித்தியாலயம்

படம் 2

வரைந்தவர்

சு.பிரவீண், தரம் 10,

யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி

இந்த இரு சித்திரங்களும் இறுதிப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

**இன்றைய சித்திரப் போட்டிக்கான தலைப்பு – ஊரடங்கும் ஊர் மக்களும்**


படம் 1



படம் 2

# ஊடரங்கை நீடிக்க இதுதான் காரணம்

கொழும்பு, மார்ச் 25

ஊடரங்கு சட்டம் நீடிக்கப்பட்டமைக்கான காரணம் குறித்து பாதுகாப்பு செயலாளர் மேஜர் ஜெனரல் கமல் குணரத்ன பொது மக்களுக்கு விளக்கமளித்துள்ளார்.

காணொளி ஒன்றினை வெளியிட்டு அவர் இது குறித்து விளக்கமளித்துள்ளார்.

இதன்போது கருத்து வெளியிட்டுள்ள அவர், 'கடந்த மார்ச் 20 ஆம் திகதி முதல் அமுல்படுத்தப்பட்டு வரும் பொலிஸ் ஊரடங்குச் சட்டத்தை மீறுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது.

பாதுகாப்பு மற்றும் சுகாதார அமைச்சு ஆகியன வழங்கியுள்ள அறிவுறுத்தல்களை பின்பற்றுமாறு பொதுமக்களிடம் கேட்டுக்கொள்கின்றேன்.

கொரோனா வைரஸ் பரவலை தடுத்து பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யும் ஒரு முன்கூட்டிய நடவடிக்கையாகவே ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது.

வைரஸ் பரவும் அபாயத்தை கட்டுப்படுத்தக்கூடிய கட்டத்திற்கு குறைக்கும் வரை பாதுகாப்பு அமைச்சினால் மீண்டும் ஊரடங்கு சட்டம் பிறப்பிக்கப்படும்.

இவ்வேளையில் மக்கள் தமது வீடுகளுக்குள் தரித்திருந்து அரசாங்கத்தின் நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்க வேண்டும்.

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த பொது மக்களின் ஒத்துழைப்பு இன்றியமையாததாகும். நாங்கள் நடமாட்டத்தை நிறுத்தி, நேரடி தொடர்புகளை தவிர்க்கா விட்டால் வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்துவது கடினம்.

பொலிஸ் ஊரடங்கு அமுலில் உள்ளவேளையிலும் அத்தியாவசிய சேவைகளுடன் இணைக்கப்பட்டுள்ள அரச அதிகாரிகள் தமது கடமைகளுக்கு சமூகமளிக்க சேவை அடையாள அட்டைகளைப் பயன்படுத்தலாம்.

யாழில் இடம்பெற்ற சம்பவத்தின் காரணமாகவே மன்னார், வாவுனியா, கிளிநொச்சி, முல்லைதீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய ஐந்து மாவட்டங்களில் ஊரடங்குச் சட்டம் நீட்டிக்கப்பட்டுள்ளது.



அந்த மாவட்டங்களில் உள்ள மக்களிடையே வைரஸ் பரவலை தடுக்கவேண்டிய நிர்பந்தம் அரசாங்கத்திற்கு ஏற்பட்டதால், முழு வடக்கு பிராந்தியத்திலும் ஊரடங்கு சட்டத்தை அமுல்படுத்தும் இந்த திடீர் முடிவை எடுத்தோம்.

ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ளபோது பயணங்களை தவிர்த்து அனைவரும் தமது வீடுகளில் இருக்க வேண்டும்.

நாட்டில் வசிக்கும் 2 கோடி 20 இலட்சம் மக்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் பொலிஸ் மற்றும் படை வீரர்கள் கொரோனா வைரஸிலிருந்து பொதுமக்களின் பாதுகாப்பை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

பொதுமக்கள் பொறுப்புடன் செயல்படவில்லை என்றால், படையினர் மற்றும் பொலிஸ் உள்ளிட்ட அனைத்து நிறுவனங்களும் செய்யும் கடினமான பணிகள் பயனற்றதாக அமைந்து விடுவதோடு ஒட்டுமொத்த மக்களும் ஆபத்தினை எதிர்நோக்க வேண்டிவரும் – என்றார்.

## சிறு குற்றங்களுக்கான கைதிகளை விடுவிப்பது குறித்து அரசு ஆராய்வு

கொழும்பு, மார்ச் 25

சிறு குற்றங்களுக்காக சிறையில் அடைக்கப்பட்டுள்ளவர்களையும், பிணை பெறமுடியாதவர்களையும் விடுவிப்பதற்கான வழியைக் கண்டறிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒரு குழுவை நியமித்துள்ளார் என்று அவரது அலுவலகம் தெரிவித்துள்ளது.

சிறிய குற்றங்களைச் செய்த கைதிகளுக்கு சட்டரீதியான நிவாரணம் வழங்குவதற்கான சாத்தியக்கூறுகள் குறித்து பரிந்துரைகளை வழங்க நியமிக்கப்பட்ட குழுவின் உறுப்பினர்களுடன் நேற்று ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தின் போது ஜனாதிபதி இந்த அறிவுறுத்தல்களை வெளியிட்டார் என்று ஜனாதிபதிகள் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சிறைச்சாலைகளின் ஆணையாளர் ஜெனரல் ஜெயசிறி தென்னகூன், துணை ஆணையர் வேனுரா குணவர்தன, பி.ஏ.எஸ்.எல் கலிங்க இந்ததிஸ்ஸா, செயலாளர் கௌசல்யா நவரத்ன, ஜனாதிபதி செயலகத்தின் சட்ட விவகார இயக்குநர் ஜெனரல் ஹரிகுபா ரோஹனாதீரா, ஜனாதிபதி செயலணியின் தலவர் சவேந்திர சில்வா மற்றும் சட்டத்தரணி சுசாரா பானியல் ஆகியோரை ஜனாதிபதி சந்தித்தார்.


சசிகா லேணர்ஸ்



முறையான சாரத்தியத்தைக் கற்றுக் கொள்ள எம்முடன் இணைந்து கொள்ளுங்கள்.

வாகனப் பயிற்சியாளர்களுக்கு நேர தாமதமின்றி பயிற்சி வழங்கப்படும். (கிளை நிறுவனங்களிலும் வாகனப் பயிற்சியை மேற்கொள்ளலாம்.)

விண்ணப்பதாரிகள் கட்டணங்களை தவணை முறையில் செலுத்த முடியும்.

எழுத்துப் பரீட்சைக்கான வகுப்புகளும், வாகனத் தொழில்நுட்ப வகுப்புகளும் நடைபெறும்.

எழுத்துப் பரீட்சைக்கான வீதி ஒழுங்கு நூல், பரீட்சை மாதிரி வினாத்தாள், செய்முறைப் பரீட்சைக்கு வாகன சாரத்தியம் சம்பந்தமான குறிப்புக்கள் என்பனவும் வழங்கப்படும்.

எழுத வாசிக்கத் தெரியாதவர்களுக்கு வாய்மொழி மூலப் பரீட்சையில் தோற்றுவதற்கு ஒழுங்குகள் செய்து தரப்படும். விரைவில் எழுப் பரீட்சை ஒழுங்கு செய்து Learners Permit பெற்றுத் தரப்படும்.

தலைமை காரியாலயம்,
இல.57, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
HotLine - 077 722 6847
021 221 7678
077 614 0361
Sasika Learners
Sasika Driving Schoolgmail.com

THE SASIKA LEARNERS

அரச அதிகாரம் பெற்ற சாரதிப் பயிற்சிப் பாடசாலை

DS NO - 882

கிளை நிறுவனங்கள் –

வேலனை
வங்களாவடிச் சந்தி, வேலணை
021 221 5472
070 301 3012

கே.கே.எஸ்.வீதி, மல்லாகம்.
021 224 3393
070 301 3014

சங்கானை
ஒடக்கரை வீதி, சங்கானை
021 225 1664
070 301 3016

யாழ்ப்பாணம் (Town)
இல.281 C, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்
(போதனா வைத்தியசாலை பின்புறமாக)
021 221 5472
07 301 3012

காரைநகர்
021 225 2454
070 510 2484

பண்டத்தரிப்பு
021 225 2333
071 255 4135

பருத்தித்துறை வீதி, நெல்லியடி
021 226 0999
071 775 0999

# கொரோனா இல்லாதொழிக்க சகலருமே ஒன்றிணையுங்கள்!

## கட்சித் தலைவர்களுக்கு பிரதமர் அழைப்பு



கொழும்பு, மார்ச் 25

கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டுக்கான நடவடிக்கைகளில் அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களையும் இணைத்து ஒன்றுபட்டு சவால்களை வெற்றிக்கொள்ளுமாறு பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்துள்ளார்.

பிரதமர் தலைமையில் நேற்று அலரிமாளிகையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலின்போது நாட்டுக்குள் பரவிவரும் கொரோனா வைரஸை கட்டுப்படுத்தும் நடவடிக்கைக்கு எவ்வாறு இணைந்து செயற்படுவது தொடர்பில் ஆராயப்படவுள்ளது.

தற்போது அரசு முன்னெடுக்கும் செயல்பாடுகள் வரவேற்புகுரியது என்றும், தொடர்ந்து முழுமையான ஆதரவுவழங்குவதாகவும் கட்சித்தலைவர்கள் இதன்போது தெரிவித்தனர். அத்துடன் வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதாரத்தை எவ்வாறு குறுகிய காலத்திற்குள் முன்னேற்றுவது என்பது தொடர்பிலும் இதன் போது விசேட கவனம் செலுத்தப்பட்டது.

நாட்டின் தற்போதைய சுகாதார மற்றும் பாதுகாப்பு நிலை குறித்து சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் கட்சித்தலைவர்கள் மத்தியில் தெளிவுப்படுத்தினார். சதொச உள்ளிட்ட வர்த்தக நிலையங்களின் ஊடாக அத்தியாவசிய பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான வசதிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அது தொடர்ந்து முன்னெடுக்கப்படுமென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

மேலும், கொரோனா தொற்றை தடுப்பதற்கு முன்னெடுக்கப்படும் செயற்பாடுகளைப் போன்று பொருளாதாரம் தொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டுமெனவும் அவர் கூறினார். (ஐ)

### கொரோனா தொற்று சிகிச்சைக்காக

## 16 அறைகளுடன் புதிய வார்ட் ஒரு வாரத்தில் கட்டப்படுகிறது



கொரோனாதொற்றுக்கானசிகிச்சைக்காக முல்லேரியா தேசிய தொற்று நோய்கள் வைத்தியசாலையில் இரண்டு புதிய கட்டடங்களை உருவாக்கி வருகின்றனர். இலங்கை விமானப்படையின் பொறியியல் பிரிவினர் இவற்றை அமைத்து வருகின்றனர்.

16 அறைகளை கொண்டதாக இந்த கட்டடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்த மாதம் 18 ஆம் திகதி கட்டுமானப் பணிகள் தொடங்கியது. ஒரு வாரத்தில் பெரும்பாலும் இன்று கட்டுமானப் பணிகளை முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## இலங்கையில் உள்ள அமெரிக்கர்களை உடன் நாடு திரும்ப தூதுவர் அறிவுறுத்து

கொழும்பு.மார்ச் 25

இலங்கையில் உள்ள அமெரிக்கர்களை உடனடியாக நாடுதிரும்புமாறு கொழும்பிலுள்ள அமெரிக்கத்தூதரகம் அறிவுறுத்தியுள்ளது.

இலங்கை மற்றும் மாலைதீவுக்கான அமெரிக்க தூதர் அலினா பி. டெப்லிட்ஸ் தனது டுவிட்டரில் வெளியிட்டுள்ள செய்தியில், இலங்கை மற்றும் மாலைதீவில் உள்ள அமெரிக்கர்களை நாடு திரும்புமாறு வலியுறுத்தியுள்ளார்.

இலங்கை மற்றும் மாலைதீவில் சுகாதார அதிகாரிகள் எடுத்த தீவிர முயற்சிகள் எடுத்தபோதிலும், நிலைமை கடுமையானது மற்றும் சவாலானது என்று அவர் தெரிவித்துள்ளார்.

## கொரோனா தடுப்பு நடவடிக்கை குறித்து நேற்று யாழில் விசேட கலந்துரையாடல்





கொரோனா COVID- 19 சம்பந்தமான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுள்ளது.

யாழ் போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் த.சத்தியமூர்த்தி, வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஆ.கேதீஸ்வரன் மற்றும் பொது வைத்திய நிபுணர் மருத்துவர் சிவன்சுதன் ஆகியோர் தலைமையில் இது நடைபெற்றது

மேற்படி கலந்துரையாடலில் வைத்தியசாலையின் கொரோனா தொற்று விசேட செயலணி உறுப்பினர்கள், மேலதிக அரசாங்க அதிபர், ஆளுநரின் செயலாளர், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், சமுதாய மருத்துவ நிபுணர், சுகாதார வைத்திய அதிகாரிகள், பாதுகாப்பு படையினரையும் சந்தித்து அவற்றை தடுப்பதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் பற்றிக் கலந்துரையாடப்பட்டது.

குறிப்பாக இந்த நோய்க்கான சிகிச்சை வசதிகளை மேம்படுத்தல் மற்றும் இந்த நோயை முற்றாக இல்லாதொழித்தல் சம்பந்தமாக விசேட தீர்மானங்களும் இக்கலந்துரையாடலில் மேற்கொள்ளப்பட்டன. அனைவரும் ஒன்றிணைந்து கொரோனா வைரஸை இல்லாதொழிக்க தேவையான அனைத்து நடவடிக்கைகளை எடுப்பது எனவும் முடிவெடுக்கப்பட்டதாக அறிய வந்தது.

வெளிநாடுகளுக்கான துரித தபால்கள், பொதிகள் சேவை




20 வருட கால அசைக்க முடியாத நம்பிக்கையை வென்ற நாமம்

அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10 மாநகர சபை புதிய கட்டத் தொகுதி,
கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

021 222 3536

நெல்லியடியில் – இல, 01, பெற்றோல் செற்லேன்,
நெல்லியடி, 076 443 1576

சாவகச்சேரி – இல.01 NDB வங்கிக் கட்டடம்,
தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி. 076 443 1576

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள காலைக்கதிர் பிறஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.03.2020 இல் வெளியிடப்பெற்றது.